

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஓடிச்சென்ற ஈழவனுக்கு ஒரு ஐரோப்பியனின் உண்மைகூறல்



– கி. சிவஞானம் –

வந்திறங்கி,
சந்தடிமிக்க எந்தன் ஐரோப்பிய
நகரத்துத் தெருவொன்றில்
"ஆ"வென வாய் பிளந்து
வானுயரும் வண்ணமிகு கட்டிடங்களைப்
பார்த்து நிற்கும்
ஈழ தேசத்தவனே!
நன்றாய், மிக நன்றாய் உற்றுப்பார்!
அவற்றினுள்ளே, அவற்றை
தாங்கி நிற்கும் பொருள்கள் தெரிகிறதா?
உள்ளோடிப் பார்,
என் தந்தையின்
பாட்டனின், பாட்டனின் பாட்டனின்
எலும்புகள்.
இரும்புகளைச் சுற்றி அப்பியிருக்கும்
சீமெந்து மட்டுமென்ன?
என் மூதாதையரின் தசை அணுக்கள்;
உயிர்ப் பொருள்கள்.
அவர்கள் இரத்தமே நீராய் ஊற்றப்பட்டது.
நிரந்தர இருப்பிற்காய்
எத்தனை யுகங்களாய் எத்தனை சாவுகள்?
எத்தனை அழிவினூடும் எத்தனை எழுச்சிகள்!
கோடானுகோடி உயிர்ப்பொருள் கொண்டமைத்தனர்
இந்த இருப்பை.
வரலாற்றின் நகர்வுகளில்

ஆயிரம் கோடி மின்னல்கள் ஒன்றாய்
அவர்களின் தலையில் இறங்கின.
கால காலமாய்க் கொடும்பனி பொழிந்தது.
இருப்பினுமவர்கள் தமதும், நமதும்
இருப்பில் உறுதிகொண்டு
நிமிர்ந்து நின்றனர்;
நிறைவாய் இருந்தனர்.

நாளை உன் தேசம் பேரன் செல்வான்
வாய் பிளப்பான்
இப்போதங்கும் மனிதர்கள்
தமது இருப்பை
எம் முந்தையர் போலவே
உறுதி செய்கிறார்களன்றோ!
எனவே அன்று
உன் பேரன், உன்னை உரித்து
பரி நிர்வாணமாக்கி
பரி சோதிப்பான்;
உனக்கு 'முதுகெலும்பு ஏனற்றுப்போனது'
என்று.

வாயைப் பிளந்து நிற்கும்
ஈழ நண்பனே!
வழி விடு
பயணம் தொடர வேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

ஆவணி 1993



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# நீளுகின்ற கறுப்பு யூலை 83

கறுப்பு யூலை என்று வர்ணிக்கப்படும், 1983ம் ஆண்டின் தமிழினப் படுகொலை நடந்து 10 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இப்பத்து ஆண்டு நிறைவு காலம் தமிழினத்தின் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றில் ஒரு முக்கிய போராட்ட காலகட்டத்தைக் குறித்து நிற்கிறது. சிங்கள இனவாத நெருப்பு சுவாலை விட்டு எரிந்த அந்த யூலை தமிழீழப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தமிழீழ மக்களை ஆயுதப் போராட்டத்தின் பால் அணிதிரளச் செய்ததும் அவ் நிகழ்சியேயாகும்.

பத்து வருடப் போராட்ட வரலாற்றை நாம் திரும்பிப் பார்த்தோம் எனில், போராட்டம் வளர்ச்சி பெற்று, தனிநாட்டு எல்லைக்குள் காலடி எடுத்து வைக்க முயல்வதைக் காணலாம். புதிய அரசுக்குரிய கட்டமைப்புகள், அம்சங்கள், பண்புகள் ஆகியவை வளர்ச்சியுற்று வருவதை காணலாம். மறுபுறம் சிங்கள இனவாதம் அதன் ஒடுக்குமுறையில் குறைவில்லாது வளர்ந்து வருவதையே காணலாம். மொழி, நிலம், கல்வி, தொழில், குடியேற்றம், உயிர்க்கொலை ஆகிய சகல விடயங்களிலும் ஒடுக்கு முறையின் தன்மையும், அளவும் அதிகரித்தே வந்துள்ளன. ஆயினும், போராட்டத்தின் விளைவாக, எதிர்ப்பியக்கத்தின் பய னாக இனவாதம் பயந்துபோய் உள்ளது; பின்வாங்கியுள்ளது; யோசிக்கத் தொடங்கியுள்ளது என்பதே உண்மையாகும்.

யூலைக் கலவரத்துக்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவராக இருந்தவரான முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொல்லப்பட்ட போது, இனக்கலவர மொன்று வெடிக்கவில்லை. உரிமைகளைக் கோருவோரை கொல்வதால் பிரச் சினை தீரப்போவதில்லை என்ற அறிவு வரப்பெற்றுள்ளனர் என்பதை விட, கர்மவினை என்ற பௌத்த கொள்கையின் பிரகாரம் தம்மைத் தீவினை துளும் என்ற பயம் வரப்பெற்றுள்ளனர் என்பதே பொருந்தும்.

பத்து வருடத்தின் கசந்த அனுபவத்தின் பின்னரும் சிங்கள இனவாதம் அப்படியே உள்ளது என்பதற்கு, பொருளாதாரத் தடை இன்னுமொரு உதார ணமாகும். யுத்தக்கைதிகள் விடயத்திலும் இது நிருபணமாகியுள்ளது. தடை செய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றை அனுப்புவதான உறுதிமொழிக் கடிதத்துடன் கைதிகள் அனைவரையும் கொழும்புக்கு எடுத்துச் செல்வதே அரசின் நோக்கமாகும். ஆனால் விடுதலைப்புலிகள், பொருட்களின் தடைநீக் கத்தை வர்த்தமானியில் அறிவித்து, உலகிற்கும், பொதுமக்களுக்கும், தடையை அமுல்படுத்தும் களத்திலுள்ள இராணுவத்தினருக்கும் அறிவிக்க வேண்டும் எனவும், தடை நீக்கப்பட்டவற்றில் கணிசமான பொருட்கள் வந்த பின்னரே கைதிகள் அனைவரும் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர். விடுதலைப் புலிகளின் இந்த ராஜதந்திர நடவடிக்கையை எதிர்கொள்ள முடியாமல் அரசாங்கம் தடுமாறி யுள்ளது. தற்போது அப்போர்க் கைதிகள் மீண்டும் தம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களுடைய உறவினர்களும் அவர்க ளுக்கு ஆதரவாக உண்ணாவிரத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

தென்தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு தமிழ் மக்கள் பலரை காணமல் செய்து வருவதோடு, சிங்களக் குடியேற்றங்களை அதிகரித்து, வடக்குகிழக்கை புவியியல் ரீதியாக பிரிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட் டுள்ளது. கிழக்கை வடக்கிலிருந்து பிரிப்பதற்காக ஒரு குடியொப்பத்தை வைப்ப தற்கு தற்போது தகுந்த சந்தர்ப்பம் இல்லையெனக் கண்ட அரசாங்கம், தமிழினப் படுகொலைமூலம் எதிர்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தை உருவாக்க முயல் கிறது.

சிங்கள இனவாதம் தானாக நீங்கும் என்பதை விட, அது தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தினால் அழிக்கப்பட வேண்டும் என்பதையே 1983 யூலைக்குப் பின்னரான பத்துவருட அனுபவம் தெளிவாக்கியுள்ளது.

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்



# வித்தைகளின் விளைநிலம்

**1986** இன் ஆரம்பத்தில் ஒரு நாள் யாழ் கோட்டையில் இருந்து இராணுவம் வெளிவருகின்றது. சண்டைக்குப் புறப்படுகின்றோம். கிட்டண்ணா 'கமரா' ஒன்றைத் தந்து படம் எடுக்கும்படி கூறுகின்றார். நானோ அதற்கு முன் படமெடுத்ததில்லை. ஒரு பட்டினைக் காட்டி "இதை அழுத்து; படம் எடுக்கும்." என்று கூறினார். நானும் ஓடிஓடி அந்த பட்டினை அழுத்துகின்றேன். இப்படியே ஒரு 'பிலிம் றோலை' முடித்துவிட்டேன். எப்படிக் கழற்றுவது என்று தெரியாது, என்ன செய்வது என்று தெரியாது முழுசிக் கொண்டு நிற்கின்றேன். எனது நிலை கிட்டண்ணாவுக்குப் புரிகின்றது. 'கமரா'வை வாங்கி 'றீவைன்' பண்ணி, புது 'றோல்' போட்டுத் தருகின்றார். மீண்டும் ஓடிஓடி அந்த பட்டினை அழுத்துகின்றேன்.

**ஒரு நல்ல புகைப்படம் பல விடயங்களைச் சொல்லக்கூடியது. எழுத்து வடிவில் உள்ள தகவல்களை விட, படங்கள் வழியாகக் கொடுக்கப்படும் தகவல்கள் மிக இலகுவில் மக்களைச் சென்றடையக் கூடியவை."**

இப்படியாக ஆறு 'றோல்' முடிந்து, ஏழாவது 'றோலி'லும் முக்கால் பங்கு எடுத்துவிட்டேன். முகாம் திரும்புகின்றோம். "எத்தனை 'றோல்' எடுத்தனீ?" எனக் கிட்டண்ணா கேட்கிறார். பயத்துடன் 'ஏழு' என்கிறேன். "சரி கொண்டு போய் 'டெவலப்' பண்ணு." என்கிறார்.

டெவலப்பண்ணி 'நெக்கடிவ்'வைப் பார்க்கும்வரை என்னுள் எழுந்த உணர்வுகள்..... டெவலப்பண்ணிய சக போராளி, எல்லா 'றோலி'லும் படம் வந்துள்ளது என்று கூறும் போது என்னுள் எழுந்த உணர்வுகள்..... 'நெக்கடிவ்' காய்ந்தவுடன், அவற்றுடன் கிட்டண்ணாவிடம் செல்கிறேன். அவற்றைப்பார்த்து, அவற்றில் சிலவற்றை நல்ல கோணம், நல்ல படம் என்றும், சிலவற்றில் என்ன செய்தால் நன்றாக வந்திருக்கும் என்றும், சில மங்கலாக இருந்தவை ஏன் அப்படி வந்தன என்றும் விளக்கி, புகைப்படம் பிடிப்பது சம்பந்தமாக சில விடயங்களைக் கூறுகிறார். "இது ஒரு ஓட்டோமற்றிக் கமரா என்றபடியால் உனக்குப் பிரச்சினை வரவில்லை. ஆனால், நான் பழகும் போது...."

இயக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் காலம். மிகவும் கஷ்டப்பட்டு கிட்டண்ணா புகைப்படம் பிடிக்கப் படிக்கின்றார். கைச்செலவுக்குக் கொடுக்கப்படும் பணத்தை மிச்சம் பிடித்து ஒரு 'பிலிம்றோல்' வாங்குகிறார். விதம் விதமாக அலைந்து திரிந்து படமெடுக்கின்றார். மிகவும் ஆர்வத்துடன் அதை 'டெவலப்' செய்கின்றார். சிறு தவறினால் படம் ஒன்றுகூட வரவில்லை. தளராத மனத்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



டன் கிட்டண்ணா மேற்கொண்ட முயற்சிகள், புகைப்படத்துறையில் எம்மை வழிநடத்தும் ஒரு ஆசானாக உயர்த்தியது. வெளிநாடுகளில் இருக்கும் பொழுது, கிட்டண்ணா எனக்கு எழுதிய வைகூட, எம்மை வழிநடத்தப் பெரிதும் உதவுகின்றது. "நான் பக்கம் பக்கமாக எழுதுவதை விட ஒரு நல்ல புகைப்படம் பல விடயங்களைச் சொல்லக்கூடியது. எழுத்து வடிவில் உள்ள தகவல்களை விட, படங்கள் வழியாகக் கொடுக்கப்படும் தகவல்கள் மிக இலகுவில் மக்களைச் சென்றடையக் கூடியவை."

"இன்றைய உலகில், படங்கள் ஓர் எளிய பிரச்சாரச் சாதனமாகப் பாவிக்கப்படுகின்றன. எமது போராட்டத்திலும், உள்ளூரிலும், சர்வதேசத்திலும் நாம், எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு புகைப்படங்கள் மிக முக்கியம்.

புகைப்படங்கள் பிரச்சாரத்திற்கு மட்டுமல்ல, நாளைய எமது சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லும் வரலாற்றுச் சான்றுகளும் இவைதான். எனவே, எம்முடைய விடுதலைப் போராட்ட வரலாற்றில், அதற்குரிய முக்கியத்துவம், கவனம் செலுத்தப்படல் வேண்டும். சர்வதேச அரங்கில் எமது போராட்டத்தைப் பற்றியும், பொதுமக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் பற்றியும், எமது மக்கள் படும் அவலங்கள் பற்றியும் எடுத்துக் காட்டுவதற்கு, தரமான புகைப்படங்கள் அவசியமாகின்றது. புகைப்படத்தின் அவசியத்தை நாம் ஒருவாறு உணர்ந்து கொண்டாலும், அப்புகைப்படக் கலையை வளர்ப்பதில், மிகுந்த அக்கறை காட்ட வேண்டியவர்களாகின்றோம். புகைப்படம் பிடித்தல் என்பது ஒரு கலை. புகைப்படம் எல்லாராலும் எடுக்கமுடியும். இன்றைய நவீன உலகில் மிகவும் நுண்ணிய, தொழில்நுட்பம் வாய்ந்த 'கமராக்கள்' வந்து விட்ட வேளையில், எந்த முட்டாளும் படம் எடுக்க முடியும். ஆனால், ஒரு நல்ல கலைஞனாலேயே நல்ல தரமான படங்களை கொடுக்க முடியும்.

"எமது பையன்களை, நாம் நன்கு வளர்க்க வேண்டும். நல்ல தரமான சர்வதேச தரத்திற்கு ஏற்ப படமெடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். புகைப்படம் எடுப்பவர்களைப் பற்றி, நன்கு யோசித்து, அவர்களது கற்பனை வளத்தை வளர்க்கப் பழக்க வேண்டும். கமராவை வைத்திருப்பவர் கமராவை மட்டுமல்ல தன்னுடைய கற்பனையையும் சுமந்து திரியவேண்டும்."

கிட்டண்ணா எல்லாக் கலைகளிலும், எல்லாத்துறைகளிலும் ஆர்வமுள்ள ஓர் அற்புதமான மனிதன்.

– சிங்காரம் –



யுத்தக்கைதிகளாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசாரின் பெற்றோர், யாழ்ப்பாணத்தில் தமது பிள்ளைகளோடு, தமது துயரங்களைப் பகிர்ந்து கொண்டதன் பிற்பாடு, விடுதலைப் புலிகளினோடு உரையாடும்போது, "எங்களுக்கு யாழ்ப்பாணம் என்றால் கறுத்தக் கொழும்பான்தான் நினைவுக்கு வரும் என்றோம். அந்தளவும் தான். கூடைகள் நிறைய மாங்கனிகள் கொண்டு வந்து தந்தார்கள். தாகமாக இருக்கிறது தண்ணி என்று கேட்டதும், தெம்பிலி (இளநீர்) கொண்டு வந்து தந்தார்கள்." இவ்வாறு, தங்களை விடுதலைப் புலிகள் உபசரித்ததை நன்றியோடு அந்தப் பெற்றோர்கள் நினைவு கூர்கிறார்கள்.

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

**அவன் பாடசாலைக்குப் போய் எவ்வளவோ நாளாகிவிட்டது. தினமும் அவனைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு அவனின் தாய் செய்த முயற்சிகள் எல்லாமே வீண். எப்போதோ நடந்த விமானத் தாக்குதலில் தன் நண்பனை இழந்து, நட்பின்றி, துணையின்றி, விருப்பின்றி பாடசாலையை மறந்து இருந்தான்.**

அவன் பாடசாலைக்குப் போய் எவ்வளவோ நாளாகி விட்டது. தினமும் அவனைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு அவனின் தாய் செய்த முயற்சிகள் எல்லாமே வீண். எப்போதோ நடந்த விமானத் தாக்குதலில் தன் நண்பனை இழந்து, நட்பின்றி, துணையின்றி, விருப்பின்றி பாடசாலையை மறந்து இருந்தான்.

அவனுடைய மாமாவும் இயக்கத்தில்தான் இருந்தார். எத்தனை தடவை அவர் சொல்லியிருப்பார்.

"உந்த பம்பரை விழுத்துறன் பார்" என்று. இன்னமும் அது குண்டு போட்டுக் கொண்டே தான் இருக்கிறது. அவனுக்கு மாமாவிலையும் அவர் சேர்ந்த இயக்கத்திலையும் சரியான கோபம். பள்ளிக்கூடத்தில் டீச்சர் "அதோ அதோ பம்பர். ஒண்டு......" என்ற பாட்டைப் பாட ஆரம்பித்து, கடைசி வரியை "பயந்து நாங்கள் படுத்திருந்தால் ஞாயமோ'' என்னும்போது அவனுக்குள்ளும் ரோசம் வரும்.

விமானம் எத்தனை குண்டு போட்டாலும், அவன் அம்மா எவ்வளவு கூப்பிட்டாலும், அவன் பங்கரில் ஒளிவதில்லை. அதை எப்படி வீழ்த்தலாம் என்று மட்டும் அந்த சின்ன மூளை யோசிக்கும்! மாமாவிடம் பல தடவை உண்மையாகவே கேட்டிருப்பான். "மாமா,

**"சுட்டுப்போட்டேன் என்ரை நண்பனைக் கொண்ட பிளேனை சுட்டுப்போட்டேன்" கத்தினான். அம்மாவிடம் ஓடி, சொல்லி சந்தோசப்பட்டான்.**

## சிறுகதை

முல்லை யேசுதாசன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



உங்களுக்கு ஏலாவிட்டா உங்கட துவக்க தாங்கோ. நான் பம்பரை சுடுறன்." என்று. "போடா, நீ சின்னப்பொடியன். இதெல்லாம் நீ தூக்கமாட்டாய்.'' என்று அவர் சொல்லும் போது அவனுக்கு பலமான கோபம் வரும். ஏமாற்றுகிறார் என்று நினைப்பான்.

தன்னுடைய நண்பனை பம்பர் குண்டு போட்டு சாகடிச்சதைப் பற்றி அம்மாவோ, மாமாவோ கவலைப்படாம இருக்கினமே என்ற கோபம் அவனுக்கு இருந்தது. இந்த இயக்கம் பிளேனை விழுத்தாதோ என்று நண்பர்கள் கேட்டால், "போங்கடா நானும் பிளேனை விழுத்துவன். என்னட்டை துவக்கில்லை." என்பான் அவன்.

இம்முறை மாமன் வந்த போது, அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி, பள்ளிக்கூடம் போவேன் என்று உறுதி சொல்லி, ஒரு துவக்கு செய்து கொண்டு விட்டான். அவர் தனக்குத் தெரிந்த நெருப்புப் பெட்டியினால் உராய்வு ஏற்படுத்தி, சத்தம் மட்டும் ஏற்படும் படியான, ஆபத்தில்லாத ஒரு துவக்கைச் செய்து கொடுத்து, ஒரு ஓணானையும் சுட்டுக்காட்டி, சற்றுப் பெரிதான ஈயக்கடதாசியில் ஒரு குண்டையும் செய்து கொடுத்தார்.

அது 'பம்பரைச் சுடுமா?' என்று மனதுக்குள் சந்தேகப் பட்டு, இன்னொரு நண்பனைக் கண்டு விபரம் கேட்டான். அவன் நையாண்டி பண்ணினான். "போடா,

தான். குண்டு வீழ்ந்து, தன் நண்பனும், இன்னமும் பலரும் இரத்த வெள்ளத்தில் துண்டு துண்டாய்... அவன் எண்ணங்களில் வந்து போனார்கள். ஆச்சியின் திட்டும், ஆர் ஆரோவின் கதறலும் வந்து போனது. மெல்ல மெல்ல ஆக்ரோசங்கள் மனதில் எழும்பக் காத்திருந்தான். கட்டாயம் வரும் அது; கட்டாயம் சுடுவன்.

ஒருநாள், 'பம்பர்' வந்தது. தூரத்தில் குண்டுச் சத்தம். தயாரானான்; இலக்கு வைத்தான்; சுட்டான். குண்டு பட்டது என்று சந்தோசம். மாமாவை நினைத்தான். 'அவர் அதை வீழ்த்தாவிட்டாலும், அவற்றை துவக்காலதான் நான் சுட்டன். என்ரை நண்பனைக் கொண்ட பிளேனை சுட்டுப் போட்டேன்.' கத்தினான். அம்மாவிடம் ஓடி, சொல்லி சந்தோசப் பட்டான். மீண்டும் அவன் பள்ளிக்கூட வாசலில். மாமா வந்தார்.

மாலை, அவன் அம்மா வரவேற்றாள். "என்னக்கா மருமகன் பள்ளிக்கூடம் போறானே?" மௌனமாகக் கேட்டார். "போறான். ஆனா நீங்கள் பம்பரை விழுத்தேல்லை. நீ குடுத்த துவக்காலை உன்ரை மருமகன்தான் பம்பரை சுட்டு வீழ்த்தினவன். தன்ரை நண்பனைக் குண்டு போட்டுக் கொண்ட அதை அவன்தான் விழுத்தினவன். இதை நாங்க நம்பத்தான் வேணும். இல்லையெண்டா அவன் பள்ளிக்கூடம் போகமாட்டான்." என்று சிரித்தாள். அவன் அம்மாவோடு, மாமாவும் அதனை ஒப்புக்கொண்டு மனதுக்குள் சிரித்தான். ■ ■

# உணர்வு

''எண்டைக்காவது நான் பம்பரை விழுத்துவன்." என்று அடிக்கடி சொல்லுவான். 'அடுத்தமுறை மாமா வரேக்கை கட்டாயம் துவக்கு கேக்கோணும். அல்லாட்டா துவக்கு ஒண்டு செய்து தரச் சொல்லோணும். அதுவரைக்கும் பள்ளிக்குப் போறதில்லை' என அவன் முடிவு செய்து விட்டான். "டேய் பள்ளிக்கூடம் போடா." என்று அம்மா கெஞ்சும்போது "மாமாட்டைத் துவக்கு வாங்கித்தாங்கோ. அல்லாட்டி பம்பரைச் சுடச் சொல்லுங்கோ." என்பான். அவள் மௌனமாகிவிடுவாள்!

உதாலை என்னண்டு பம்பரை விழுத்துவாய். சும்மா பலகையிலை துவக்கு செய்து தந்து, உன்னை மாமா ஏமாத்தியிட்டார்." என்றான் நண்பன். "போடா, மாமா ஓணான் எல்லாம் சுட்டவர். எப்பிடிச் சுடுது எண்டு உன்னைச் சுட்டாத்தான் தெரியும்." என்று அவனை நோக்கி துவக்கைத் திருப்ப, அவன் பயந்து கத்த..... அந்தப் பையனுடைய தாய் இவனைப் பேச..... துப்பாக்கியில் அவனுக்கு நம்பிக்கை வந்துவிட்டது.

'பம்பர்' தனக்கு நேர் எதிராய் வரும் என்று காத்திருந்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நாடகம் ஒரு கலையாக

- க. சிதம்பரநாதன் -

**நாடக அரங்கு ஓர் விவாதக் களமாக மாற வேண்டியது அவசியமாகிறது. நாடகக் கலைஞருக்கும், பார்வையாளருக்குமிடையே ஓர் சங்கமம் (Communion) நிலை ஏற்பட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு ஓர் சங்கம நிலை ஏற்படின் கலை அனுபவம் ஓர் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.**

கலை என்பது பற்றிப் பொதுவாகக் கருதும்போது, வாழ்க்கை பற்றிய கலைஞனின் வியாக்கியானம் மற்றவர்களால் புரிந்துகொள்ளப்படும் வகையில் கலைஞனால் வெளிப்படுத்தப்படுதல் எனக் கூறலாம். அதாவது கலைஞன் தனது சூழலுடன் கொள்ளும் தொடர்பின் காரணமாக ஏற்படும் மனவெழுச்சிகளையும், சிந்தனைகளையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த விளையும் போது, கலை உருவாகுகிறது எனலாம். இந்தக் கலைப்படைப்பாக்கத்தின் போது, அவன் தனது அனுபவங்களின் மூலம் பெற்ற வாழ்க்கை பற்றிய படிமங்களை ஞாபகப்படுத்தி, பார்வையாளருக்கு வழங்குகின்றான். அதாவது குறியீட்டுப் படிமங்களைப் பார்வையாளருக்கு தெரியப்படுத்துவதே ஒரு கலைஞனின் நோக்கமாக இருக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் கலைப்படைப்பு, கலைஞனின் கற்பனையின் விளைபொருளாக இருக்கும்.

ஓவியம், சிற்பம், நாடகம் போன்ற கலைவடிவங்கள் இத்தகைய விளைபொருள்களே. நாடகத்தைப் பொறுத்தவரையில், மேற்கூறியவாறு படிமங்களை உருவாக்குகையில், நெறியாளன், நாடகபாட எழுத்தாளன், நடிகன், விதானிப்பாளன், இசையமைப்பாளன், காண்பியக்கலைஞன் (Visual artist) போன்றோர் சேர்ந்து உழைக்கின்றனர். நாடகம் என்பது, ஓர் தொடர் படிமக் கலையாகும். ஒவ்வொரு கணமும், செவிப்புல, கட்புல படிமங்களை இக்கலை பார்வையாளருக்கு வழங்கும்.

கலையின் நோக்கத்தை ஒரு பரந்த அளவில் கருதும் போது, பார்வையாளனை மகிழ்விப்பது என்று விளக்கினாலும் கூட, பார்வையாளனது மனவெழுச்சிகளை கிளறி, அதன் மூலம் அவனைச் சிந்தனைக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது ஆகும். நல்ல கலைப் படைப்புக்கள் என்று அடையாளம் காணப்படக் கூடியவை கட்டாயம் இதைச் செய்யும். இந்த மனவெழுச்சிக் கிளறல் வெறுமனே கலைப் படைப்பைப் பார்வையிடும் போதாகிற ஒரு தற்காலிக நிகழ்வாக இல்லாமல், அவனில் தொடர்ந்து பாதிப்பைச் செலுத்துகின்ற தன்மை உடையதாக இருக்க வேண்டும். ஒரு நல்ல கலைப் படைப்பின் சில படிமங்களாவது பார்வையாளனில் தொடர்ந்து நிலைத்திருக்கும். அதன் மூலம் அவனில் சிந்தனையை ஏற்படுத்தும். கலைப்படைப்பு நுகர்வின் பின்பு, அவனில் நிலைத்திருந்து அவனில் சிந்தனையைத் தூண்டவேண்டியதே முக்கியமானதாகும்.

ஆனால், இங்கு ஒரு பிரச்சினை உண்டு. கலைஞன் உலகில் அனுபவிக்கும் விதத்தில் தனது நேர்மையான மனவெழுச்சிகளையும், எண்ணங்களையும் வலிமையான படிமங்களாக பார்வையாளனுக்கு வழங்கும் போது, அப்படிமங்களின் செல்வாக்கு வட்டத்துள் பார்வையாளனும் இழுத்துவிடப்படும் சந்தர்ப்பமும் உண்டெனினும், இது நிகழமுடியாத சந்தர்ப்பமும் உண்டென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கலைஞனின் மனவெழுச்சிகளையும், எண்ணங்களையும் பார்வையாளன் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத போது இந்தப் பிரச்சினை உருவாகுகிறது. கலைப்படைப்பை நுகர்கின்ற பார்வையாளன், அதை தனது பண்பாட்டுச் சுற்றுவட்டத்துள் வைத்தே அனுபவிக்கிறான். பார்வையாளனது சிந்தனை அவனது பண்பாட்டுச் சுற்றுவட்டத்தால் நிபந்தனைப் பட்டிருக்கும். எனவே கலைஞனின் எண்ணங்களும், பார்வையாளனின் எண்ணங்களும் முரண்படுகிற போது கலை அனுபவம் குழப்பப்பட்டுப் போகலாம். இதனால் கலைப்படைப்பு பார்வையாளனில் ஏற்படுத்த வேண்டிய பதிவுகளை ஏற்படுத்தாமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அநேகமான அரசியல் அரங்குகளில் நடைபெறுவது இதுதான்.

இத்தகைய ஒரு நெருக்கடியில் கலைஞனின் எண்ணங்களிற்கும், பார்வையாளனின் எண்ணங்களிற்குமிடையில் ஓர் கருத்தாடல் ஏற்படவேண்டியது அவசியமாகிறது. நாடக அரங்கு ஓர் விவாதக்களமாக மாற வேண்டியது அவசியமாகிறது. நாடகக் கலைஞருக்கும், பார்வையாளருக்குமிடையே ஓர் சங்கமம் (Communion) நிலை ஏற்பட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு ஓர் சங்கம நிலை ஏற்படின் கலை அனுபவம் ஓர் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ■

## செஞ்சோலை




இவர்கள் குடும்பம் பெரியது. போரினால் தாய், தந்தையரை இழந்த குழந்தைகள் செஞ்சோலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அப்பிள்ளைகளை சகல துறைகளிலும் ஈடுபடுத்தி, அவர்களின் சிறப்பாற்றலுக்கேற்ப அவர்களை அவ்வவ் துறைகளில் முன்னேற்றி வருகின்றனர்.

பிள்ளைகளின் ஆற்றல், திறன், நன்மனப்பாங்கு, நுண்ணாய்வுத்திறன் வளர்வதற்கேற்ற பூரணமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பல அரிய முயற்சிகளை செஞ்சோலை நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. மகளிர் பாடசாலை, சிறுவர் பூங்கா, நூலகம் போன்றவற்றை ஏற்படுத்தி பொது இல்லம் ஒன்றில் வாழ்பவர்களாக வளர்க்கப்படாது, தமது சொந்த வீட்டில் வாழ்வது போன்ற சுதந்திரத்துடனும், அத்தகைய உணர்வுடனும் வாழ்வதற்கேற்ற சூழலும் உருவாக்கப்பட்டு, பேணப்பட்டு வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் செஞ்சோலை மாணவர்கள், தேசிய மட்டத்திலான போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று, தங்கப்பதக்கத்தைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. செஞ்சோலை, மேலும் பல திட்டங்களைத் தீட்டி, தனது வேலைத்திட்டத்தை விஸ்தரிக்கவுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இவள் மீண்டும் வரமாட்டாளா

பழுதடைந்த பண்ணை ஒன்றை திருத்தி அமைக்கும் வேலைகள் மும்முரமாக கப்டன் குவேனியின் தலைமையில் நடந்துகொண்டிருந்தன. சிறு பற்றைக் காடுகள் மண்டி, சிதைந்துபோய்க் கிடந்த அந்தப் பண்ணையை செழிப்புற வைக்க கடுமையாக உழைத்தார்கள். அந்தக் கிராமத்தில் வறுமைப்பட்டிருந்த ஏராளமானோர் பண்ணையில் வேலைவாய்ப்பைப் பெற்றனர். அந்தப் பண்ணையைச் செழிப்பாக்கும் முயற்சியில் இறங்கி தமது உழைப்பை அவர்கள் நல்கத் தொர்டங்கினர். மிகவும் கஸ்டப்படும் குடும்பத்தின் தலைவனான ஐயா என்று அழைக்கப்படும் ஒருவரும் அவர்களுடன் வேலை செய்தார். அவரது கூலி உழைப்பைக் கொண்டே, வயிற்றுப் பசியைப் போக்கும் நிலையில் அவரது குடும்பம் இருந்தது. ஆனால், அவரோ தனது உழைப்பின் அரைவாசிப் பங்கை குடிப்பதற்காக செலவழித்து விடுவார். இதனால் குடும்பத்தின் வறுமை நிலை தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒரு மாத காலமாக பண்ணையில் வேலை புரிந்துகொண்டிருந்த காலத்தில் ஒருநாள், குவேனி அந்த ஐயாவின் வீட்டிற்குச் சென்றிருந்தாள். வறுமையின் கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அவ்வீட்டின் நிலைமைகள் இருந்ததைக் கண்ணுற்றாள். பிள்ளைகளின் உருக்குலைந்த கோலமும், கிழிந்த கந்தல் சேலையை உடுத்தியிருந்த அந்தத்தாயும், வீட்டின் ஏழ்மையை நன்கு வெளிப்படுத்தின. இச்சூழல் அவளை ஒரு தாங்க முடியாத சோகத்தில் ஆழ்த்தியது. குவேனி அந்த ஐயாவை ஏசிக்கொண்டிருந்தாள். தற்செயலாக அவரும் அச்சமயத்தில் வந்து சேர்ந்தார். "ஐயா, இனி உங்களிடம் நான் பணம் தரமாட்டன். உங்கட வீட்டிலதான் கொண்டுபோய்க் குடுப்பன். கொஞ்சமாவது யோசிக்கிறீங்களே ஐயா?" என்று ஐயாவை ஏதோ உரிமையிடன் ஏசிக்கொண்டாள். மரத்துக்குக் கீழிருந்து ஐயா அழுது விட்டார்.

"தனக்கு பிள்ளை போல புத்தி கூறும் அளவிற்கு அப்பிள்ளையின் உணர்வை தான் எண்ணிப்பார்க்கிறேன்" என்று தன்னை குவேனி ஏசியதை, அவளது தோழிக்கு சொல்லி அழுதார் அந்த ஐயா. கப்டன் குவேனியிடம் அளப்பரிய அன்பும், பெருமதிப்பும் அவருக்கு வளர்ந்தது. குவேனியும் அடிக்கடி அவர்களின் வீட்டிற்கு சென்று வருவாள். ஒருநாள், இராணுவமுகாம் ஒன்றை தாக்கி அழிப்பதற்கான போர்க்கால ஆராய்வில் இறங்கியிருந்த கப்டன் குவேனி, தற்செயலாக இராணுவத்தினர் கண்டுகொண்டதும், ஏற்பட்ட சண்டையில் இறந்துபோனாள். இந்தச் செய்திகேட்டு அந்த பண்ணையின் வாசலில் கிடந்து, அந்த ஐயா "குவேனி, குவேனி" என்று ஓலமிட்டு அழுதாராம். தன் பிள்ளையைப் பிரிந்த பன்மடங்கு துயர் அவரை வாட்டியது. அந்த இனிய போராளி தமது மண்ணில் மீண்டும் பிறக்க மாட்டாளா என்ற ஏக்கம் கவிய அந்த ஐயா பண்ணையைச் சுற்றி வலம் வந்தார். அன்றிலிருந்து அவரில் புதிய மாற்றம் ஏற்பட்டது. கடுமையாக உழைத்தார். பண்ணையில் நட்ட பயிர்கள் நாளொரு வண்ணமும்பொழுதொரு மேனியுமாக செழித்து வளரும் காட்சியைக் கண்டு உளமகிழ்ந்தார்.

குவேனியின் பாதம்பட்ட அந்த மண்ணை, காற்று தன் கைகளால் பௌத்திரமாக அள்ளியது. வெம்மை நிறைந்த சூரியக் கதிர்கள் பாலைமரங்களுக்கூடாக தெறித்து, அவர் முகத்திலும் பட்டது. ■■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# குடாநாட்டு முற்றுகையை முறியடித்த கடற்புலிகளின் கடலாதிக்கம்

– பிரம்மஞானி –

இரண்டாவது கட்ட ஈழப் போரின் பிரதான இராணுவ கேந்திர இலக்கு (Strategic Objective) யாழ்ப்பாண குடா நாட்டு முற்றுகையாகும். இந்த இலக்கு வெற்றி கண்டால், விடுதலைப் புலிகளின் அசைவியக்க ஆற்றலை (Mobility) துண்டித்து, புலிப்படை வீரர்களை குடாநாட்டுக்குள் முடக்கி, போரைத் தனக்குச் சாதகமான முறையில் நகர்த்திச் செல்லலாம் என சிங்கள இராணுவத் தலைமை திட்டம் தீட்டியது.

ஆனையிறவு சமரைத் தொடர்ந்து இந்தத் திட்டம் செயல் வடிவம் பெறத் தொடங்கியது. வெற்றிலைக் கேணி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுத் தளம் வரை, கிட்டத் தட்ட 8 மைல் தூரத்திற்கு நீண்டதொரு இராணுவ வேலி அமைக்கப்பட்டது. பலகோடி செலவில், பல ஆயிரம் இராணுவத்தினரைக் குடியமர்த்தி, பிரமாண்டமான இராணுவ முற்றுகை வலயம் நிறுவப்பட்டது. இதன் உடனடி விளைவாக ஊரியான் பாதைக்கு மூடுவிழா நடந்தது.

இது ஒருபுறமிருக்க, சிங்கள இராணுவம் பூநகரிப் பிரதேசத்தை ஆக்கிரமித்து, சங்குப்பிட்டி, கேரதீவு பாதையை மூடியது. நாகதேவன்துறையிலிருந்து கல்முனைவரை கிட்டத் தட்ட 10 மைல் வரை இன்னுமொரு இராணுவ வேலி நிறுவப்பட்டது. அத்துடன் நீரேரிப் பிரதேசத்தில் போக்குவரத்தை முறியடிப்பதற்காக, நாகதேவன் துறையில் ஒரு சிறிய கடற்படைத் தளமும் அமைக்கப்பட்டது. கடற்பரப்பு நகர்வுகளைக் கண்காணிக்க ராடார் நிலையமும், பீரங்கித் தளமும் நிறுவப்பட்டதுடன், கடல் ரோந்திற்காக பல நீருந்து விசைப்படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தலைவர் பிரபாகரனுடன் கடற்படைத் தளபதி சூசை

யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி முள்வேலி இறுக்கப்பட்டது. முற்றுகை வலயம் முழுமை பெற்றுவிட்டதாக இராணுவத் தலைமை எண்ணிக்கொண்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து கல்முனை வரை யாழ்ப்பாணத்திற்கு விலங்கிடப்பட்டுவிட்டதாக சிங்களப் பேரினவாதம் திமிர் கொண்டது. இந்த நீண்ட, நெடுந்தூர முற்றுகையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புக்கள் முடக்கப்பட்டன. போராளிகளின் நடமாட்டமும், பொதுமக்களின் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுவிடுமென கொழும்பு எதிர்பார்த்தது. போருக்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் கேந்திர நுட்பம் வாய்ந்த ஒரு பாரிய திட்டத்தை செயற்படுத்திவிட்டதாக முப்படைத் தலைமையகம் திருப்தி கண்டது. ஆனால், நடந்ததோ வேறு.

முற்றுகை முறியடிக்கப்பட்டது. கிளாலிக் கடற்பரப்பில் புலிகள் இயக்கம் புதிய பாதையைத் திறந்துவிட்டது.

கிளாலிக் கடலில், கடற்புலிகள் தமது கடலாதிக்கத்தை நிலைநாட்டினர்.

வரலாற்றில் முதல் தடவையாக, தமிழீழ விடுதலைப் போரில், எமது கடற் பிரதேசத்தின் ஒரு பகுதியில், அதுவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ். கடல் நீரேரியில் கடற்புலிகளின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? புலிகளின் போராட்டப் படிநிலை வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய வரலாற்றுத் திருப்பமாக இந்த நிகழ்வு எப்படி இடம்பெற்றது?

நீண்ட கடற்பரப்பும், நீரிணையும், நீரேரிகளும் கொண்ட எமது பிரத்தியேகமான பூகோளச் சூழலில் கடலாதிக்கத்தின்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முக்கியத்துவத்தை தலைவர் பிரபாகரன் நன்கு உணர்ந்திருந்தார். போராட்டம் முதிர்ச்சி பெற்று, இறுதிக் கட்டத்தை நெருங்கும் பொழுது யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பது கடலாதிக்கப் போர் என்பதையும் அவர் அறிந்திருந்தார். இந்த அதிநுட்பமான தூரநோக்குப் பார்வையின் பெறுபேறாக கடற்புலி அமைப்பு உருவாக்கம் பெற்றது. போராட்ட நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப துரித வளர்ச்சியும் கண்டது. கடற்போர்க்கலையின் அனுபவமும் பெற்றது. தரை யுத்தங்களின் வேகம் தணிந்துபோக, குடாநாட்டு முற்றுகை இறுக, கிளாலிக் கடற்பரப்பு போர்க்களமாக மாறியது. கடற்புலிகளின் வரலாற்றுச் சிறப்பு மிக்க யுத்த காண்டம் தொடங்கியது.

கடந்த 10 மாதங்களாக தமிழீழப்போர் கிளாலிக் கடலில் மையம் கொண்டிருக்கிறது. அங்கு உக்கிரமான கடற் சண்டை நிகழ்ந்து வருகிறது. 5 கடல் மைல் அகலமும், 15 கடல் மைல் நீளமும் கொண்ட விரிந்த கடற்பரப்பில் சிங்களக் கடற்படையும், தமிழீழக் கடற்படையும் மாறி மாறித் தொடர்ச்சியாக மோதி வருகின்றன. இரவில் வாண வேடிக்கை போன்று நடைபெறும் இந்தக் கடற்சமர்களை எமது மக்கள் கண்டு களிப்பதும் உண்டு.

கிளாலிக் கடற் சண்டைகளில் சிங்களக் கடற்படைக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மிக நவீனமான நீருந்து விசைப்படகுகள் கடற்புலிகளால் நாசமாக்கப்பட்டுள்ளன. 25 அடி நீளமான ரோந்துப்படகு ஒன்றும் அழிக்கப்பட்டிருக்கிறது. கடற்படையிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கடற்படையினருக்கு பலத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. உயிர்சேத விபரத்தைக் கடற்படைத் தலைமையகம் வெளியிட மறுத்து வருகிறது. கடற்படையினரின் மனவுறுதி தளர்ந்துவிடும் என்ற அச்சத்தினாலோ தெரியவில்லை.

இந்த இழப்புகளால் கடற்படை ஆட்டம் கண்டிருக்கிறது. இதனால் கடற்புலிகளுடன் நேரடி மோதலைத் தவிர்த்துக் கொள்வதிலேயே கடற்படையினர் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர்.

“கடற்சண்டை பெரும்பாலும் 10 அல்லது 15 நிமிடங்கள் வரைதான் நீடிக்கும். அதுவும் தூரத்தில் நின்றுதான் சண்டை பிடிப்பார்கள். எமது சண்டைப் படகுகள் நெருங்கியதும், தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடிக்கிறார்கள். நாங்கள் கலைத்து அடிப்பதும், அவர்கள் ஓடிவதுமாகவே கடற் சண்டை இடம்பெறுவது வழக்கம்.” என்று பெருமிதத்துடன் கூறினான் ஒரு கடற்புலி வீரன்.

“கடற்புலிகள் எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது துணிந்து, முன்னோக்கி எம்மை நெருங்கி வருகிறார்கள்.




www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

இது எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.'' இவ்வாறு, சமீபத்தில் ஒரு கடற்படை அதிகாரி கூறியிருப்பது கடற்புலிகளின் அபாரமான துணிவை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

"மக்களின் பாதுகாப்பு அரணாகவே நாம் கிளாலிக் கடற்பரப்பில் செயற்படுகிறோம். எதிரியின் பிரதான நோக்கம், மக்களைத் தாக்கி அழிப்பது தான். மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் எமது முக்கிய நோக்கம். மக்களின் பயணப் படகுகளுக்கும் எதிரியின் கொலைப் படகுகளுக்கும் மத்தியில், நாம் நடுவே நின்று போராடுகிறோம். இந்தக் கடற்போரில் நாமும் இழப்புக்களைச் சந்திக்கிறோம். எமது போராளிகள், தமது உயிரைப் பணயம் வைத்தே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள்." என்று கூறினார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை.

கிளாலிக் கடற்போரில் இதுவரை எட்டு கடற்புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள். சமீபத்தில் கூட (24-05-1993இல்) சாஜகான், சேகர், மணியரசன் ஆகிய வீரர்கள் மக்களுக்காக மடிந்திருக்கிறார்கள். தமது உயிரைப் பணயமாக வைத்துப் புலிகள் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறார்கள் என்ற சூசையின் கூற்றை, இந்தத் தற்கொடைச் சாவுகள் நிரூபித்து நிற்கின்றன.

இந்தக் கடற்போர் ஆபத்து நிறைந்தது. எதிரியின் விசைப் படகுகள் வேகம் மிகுந்தவை. 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டவை. கடற்படைக்கு பின்தள வசதிகள் உண்டு. ஆகாயப்படையின் பக்க பலமும் உண்டு. ஆகாயப்படையின் பக்கபலமும் உண்டு.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நிலைகுலையும் போதெல்லாம், விமானப் படையின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். தேவை ஏற்படும் பொழுது தரைத் தள பீரங்கிகளும் கை கொடுத்து உதவும். இந்தக் கடற்போரில் படையாற்றல் சமபலம் எதிரிக்கு சாதகமாகவே அமைந்திருக்கிறது. பல நெருக்கடிகள் போர்ச்சூழலில், வசதிகள் எதுவுமற்ற நிலையில், வரையறுக்கப்பட்ட வளத்தில் கட்டப்பட்ட தொழில்நுட்ப பலத்தில், ஒரு சக்தி வாய்ந்த எதிரிக்கு சவாலாக கடற்புலிகள் வளர்ந்து நிற்பதும், இக்கடற் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டு ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதும் வியக்கத்தக்க விடயமாகும்.


இது எப்படிச் சாத்தியமாகியது என்று சூசையிடம் கேட்ட பொழுது, "விடாமுயற்சி, துணிவு, தன்னம்பிக்கை, போர்த்திறன் எல்லாவற்றிற்கும் மேலாக மக்களுக்காக தம் உயிரை ஈர்க்கும் அலாதியான அர்ப்பணிப்பு." என்று உறுதியான பதிலிறுத்தார்.

கடற்புலிகளின் பாதுகாப்பு கவசம் இருப்பதால் கிளாலிப் பயணம் தொடர்கிறது. யாழ் குடா முற்றுகையின் முதுகெலும்பு கடற்புலிகளால் முறிக்கப்பட்டுவிட்டது.

கிளாலிக் கடற்பயணத்தில் பொதுமக்கள் கொலையுண்ட சம்பவங்கள் பற்றி சூசையிடம் கேட்டேன். "கடற்புலிகளின் பாதுகாப்பு இல்லாத சமயத்தில் இந்தப் படுகொலைகள் நடந்திருக்கிறன. எமது பாதுகாப்பு இருக்கும் வேளையில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை. இப்பொழுது மிகவும் கட்டுப்பாடான ஒழுங்கமைப்பில் பயணிகள் போக்குவரத்து நடக்கிறது." என்று விளக்கினார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.

இப்பொழுது கிளாலிப் பயண நாட்களை நிதித் துறை

கடற்பாதுகாப்பு நிலைகளில் ஒன்று



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





கடற்படைப் பெண்கள் அணி

யினர் முன்கூட்டியே அறிவித்து விடுகின்றனர். அந்த நாட்களில் கடற்புலிப் படகுகள் வியூகம் அமைத்து காவல் புரிய கிளாலிப் பயணம் நிகழும். அந்த நாட்கள் எந்த நாட்கள் என்று கடற்படைக்கும் தெரியும். நூற்றுக்கணக்கில் படகுகள் நகர்வது ராடர் திரையில் வெண்ணிறப் புள்ளிகளாக அசையும். பகிரங்கப் பிரகடனம் செய்து, புலிகள் இயக்கம் கடல் முற்றுகையை உடைப்பதைக் காண சிங்களக் கடற்படைக்கு சினம் எழும். நாகதேவன் துறையிலிருந்து நீருந்து விசைப்படகுகள் புறப்படும். அவற்றின் வரவை எதிர்பார்த்து புலிகளின் கடற்குருவிகள் காத்து நிற்கும். கடற்போராளிகளுடன் மோதுவதைத் தவிர்த்து கடற்பயணிகளை தாக்குவதற்கு கடற்படை முயற்சிக்கும். அந்த நகர்வுகளை இனங்கண்டு, கடற்குருவிகள் கடுகதி வேகத்தில் பறக்கும். கால்மணி நேரம் கடற்சண்டை நடக்கும். அதன்பின் ஓட்டப் போட்டி நிகழும். புலிகள் விரட்ட, நீருந்துப் படகுகள் பின்வாங்கி ஓட, பூநகரி முகாமிலிருந்து பீரங்கிகள் முழங்க, கிளாலிக் கடல் விழாக் கோலம் கொள்ளும்.

தரை யுத்தம் போல் அல்லாது கடற்போர் வித்தியாசமானது. தரையின் பொருண்மிய புறநிலைகளை கண்டறிந்து செயற்படலாம். இயற்கையின் கோடுகளைக் கண்டு கொள்ளலாம். பாதைகளை வரித்துக் கொள்ளலாம். விழுப்புண் ஏற்பட்டு விழும்போது நிலம் தாங்கிக் கொள்ளும். கடல் அப்படியல்ல. எல்லையற்றதாக விரிந்து கிடக்கும். குறிப்புகள் புலப்படாது. இருள் கவிந்து கொண்டதும் பாதைகள் தெரியாது. சதா அசைந்து கொண்டிருக்கும் அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு, சண்டை பிடிப்பது சிரமம். உலுக்கி, தூக்கியெறிந்தபடி கடுகதியில் விரைந்து செல்லும் பொழுது, குறிபார்த்துச் சுடுவது இலகுவான காரியமல்ல. படகு தீப்பற்றி எரிந்து வெடித்தால், காயமடைந்தவர்களைக் கடல் விழுங்கிக் கொள்ளும்.

கடற் போர்க் கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறையப் பயிற்சியும், அனுபவமும் தேவை. மீன்போல கடலோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அத்துடன் கடற்போருக்கு அபாரமான நெஞ்சுரமும் வேண்டும். எந்த நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும். எல்லையற்றதாக விரிந்து கிடக்கும் கடற்பரப்பில் எந்த நேரத்தில், எந்த மூலையிலிருந்து எதிரி தலையெடுப்பான் என்று அனுமானிப்பது கடினம்.

"எமது போராளிகள் கடற்போர்க்கலையில் வல்லவர்கள். அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். எமது துணிவிற்கே எதிரி பயப்படுகிறான்." என்றார் சூசை.

கடற்புலிகளின் வளர்ச்சி பற்றியும், கிளாலிக் கடற்பரப்பில் அவர்கள் நிலைநாட்டியுள்ள கடலாதிக்கத்தின் முக்கியம் பற்றியும் எமது மக்கள் உணராமல் இருக்கலாம். ஆனால், எதிரி நன்கு உணர்ந்திருக்கிறான். கடற்புலிகள் வளர்ச்சியும், எழுச்சியும் சிங்கள ஆதிபத்தியத்திற்கு பெரியதொரு அச்சுறுத்தலாக எழுந்திருப்பது எதிரிக்குக் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு முற்றுகை என்ற எதிரியின் பேருபாயத்திட்டம் கடற் புலிகளால் உடைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இரண்டாவது கட்ட ஈழப்போரைக் குறித்த இலக்கில் நகர்த்த முடியாது எதிரி திணறிப்போய் நிற்கிறான். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

## – வேலைத் திட்டம் –

### மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகம்:

தமிழீழ மாணவரின் கல்வியின் தரம் பொதுவாக சர்வதேச கல்வித்தரத்திற்கு சமனாக அமையவில்லை. உலகநாடுகளின் முன்னேற்றத்துடன் தமிழீழ மாணவர் ஈடுகொடுத்து நிற்பதனால், அந்நாடுகளின் கல்வித்தரத்திற்கு ஏற்ப எமது மாணவரின் கல்வித்தரம் உயர வேண்டும். ஏகாதிபத்தியக் கல்விமுறையும், அதனைத்தொடர்ந்து வந்த கல்வி முறையும், தமிழ் மாணவர் மீதான கல்வி ஒடுக்கு முறையும், மனனம் செய்யும் ஒரு கல்வி முறையை உருவாக்கியமையால், நாம் சார்ந்து வாழும் சமூகத் தேரைகளோடு கல்வி இணையாதது மட்டுமன்றி, சர்வதேச தரத்திற்கு உயராததாகவும் அமைந்தது. கல்வி, சமூக சமநிலையை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, வறிய மாணவர்களின் கல்வித்தரம் எமது மண்ணில் பின்தங்கியுள்ளது. அதனை இப்போது ஈடு செய்யத்தவறினால், எதிர்காலத்தில் சமூகம் சமநிலையை இழந்துவிடும். வறிய, இடம்பெயர்ந்த மாணவர்களின் அவலநிலை, அவர்களின் கல்விக்கான அங்கலாய்ப்பு, ஆகியவற்றை சமூகம் தீர்க்கத் தயாராகவேண்டும்.

இலவசக் கல்வி ஏட்டுச்சுரைக்காய் ஆக முடியாது. கல்வி சமூகத்தின் ஒரு பிரிவினரின் சொத்தாகவும் இருக்க முடியாது. மாணவர்களிடையே சமூக உறவு வளர, மனப்பாங்கு விருத்தி பெற, கிராமிய மட்டத்தில், கொத்தணி மட்டத்தில், அவசியமானால் கோட்ட, மாவட்ட மட்டங்களில் மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகங்களை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு உருவாக்கத் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே அடித்தளமிடப்பட்டுவிட்ட அக்கழகங்களை உருவாக்கி, இயலாமை காரணமாக கல்வியை இழந்து நிற்போரை, அங்கலாய்த்து நிற்போரை ஒன்றிணைத்து அவர்களின் கல்வியை உயர்த்துவது இக்கழகங்களின் குறிப்பான நோக்கமாகவும், பொதுவாகத் தமிழீழ மாணவரின் கல்வியை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி, எம்மாலானவரை உலக முன்னேற்றங்களுடன் இணைப்பதும் அதன் பிரதான செயற்பாடாக அமையும்.

### மாணவர் அறிவியல் கழகம்:

உலகின் அறிவியல் துறையின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக உள்ளது. அது பல நாடுகளில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகவும் வளர்ச்சி அடைகின்றது. அறிவியல் சார்ந்த வளர்ச்சி, சமூகத்தின் தேவையை ஈடு செய்ய வேண்டும். எமது மண்ணில் அறிவியல் துறை அதிக வளர்ச்சியடையவில்லை. இத்துறையில் ஆர்வம் கொண்ட மாணவர்களை ஒருங்கிணைக்க, அவர்களின் தேவையை இனங்கண்டு, உதவ எவ்வித அமைப்பும் இல்லாதிருப்பதோடு, சமூகமும், அதில் உயர்ந்து நிற்போரும் இதனை உணர்வதாகவும் இல்லை. மாணவரிடையே உள்ள அறிவியல் பசிக்கு உணவு இட உருவானதே விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியற் கழகமாகும்.

கொத்தணி ரீதியில் உருவாகும் இக்கழகம் அறிவியல் ஆர்வம் கொண்ட மாணவர்களை இனங்காணும். அவர்களின் தேவையை கழகத்தினூடாக அறிந்து அதனைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பெற்றுக் கொடுக்கும். அதற்கான உபகரணங்களை ஒன்றிணைக்கும். மாதா மாதம் அறிவியல் கருத்தரங்கினை நடாத்தும். மாணவரின் முயற்சியை வெளிப்படுத்தி அவரவரின் ஆர்வத்தை வெளிக்கொண்டுவரும். உலகில் பல நாடுகளில் இதுபோன்ற கழகங்கள் மாணவரிடையே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. எமது தேவைக்கு ஏற்பவும், மாணவரின் தேவைக்கு ஏற்பவும் இக்கழகங்கள் பணியாற்றும்.

## மாணவர் தொழில் நுட்பக் கழகம்:

இன்றைய உலக முன்னேற்றம் தொழில் நுட்ப வளர்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்டது. தொழில் நுட்ப அறிவு குறிப்பிட்ட வயதை அடைந்த பின் பெறுகின்ற அல்லது பெறவேண்டிய அறிவு அல்ல. அது வயதின் வளர்ச்சியுடன் வளரவேண்டியது. மாணவப் பருவத்திலேயே முளைவிட்டுக் கிளம்பவேண்டியது. அப்போதுதான் அது சமூகத்தின் ஆலவிருட்சமாகப் படர முடியும். உலகின் தலை சிறந்த நுட்ப வல்லுனர் பள்ளிப்பருவத்திலேயே நுட்பத்திறனை வளர்த்துக் கொண்டதையும், அதனால் அவர்களும், சமூகமும், உலகமும் வளர்ந்து கொண்டதையும் வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது. தமிழீழ மாணவர்கள் இவ்வாய்ப்பு ஏதும் அற்றவர்களாக உள்ளனர். ஆனால் அவர்களிடமுள்ள நுட்ப ஆற்றலும், வினைத்திறனும் மறைந்து போய் உள்ளது. இதனை வெளிக் கொண்டு வரவும், அத்தகைய மாணவர்களை ஒருங்கிணைக்கவும், அவர்கள் தனித்தும், ஒருமித்தும் தமது நுட்பங்களை பரிசீலிக்கவும், பரிசோதனைகளைச் செய்யவும் வசதிகளை உருவாக்கிக் கொடுக்கவே மாணவர் தொழில் நுட்பக் கழகங்களை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு உருவாக்குகின்றது. கொத்தணி மட்டத்தில் உருவாகும் இக்கழகங்கள் மாணவருக்கான எல்லா வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதோடு, எமது சமூகம் வேண்டி நிற்கும், தொழில் நுட்பத்தை ஆக்கும் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைக்க விரும்புகின்றது.

## மாணவர் விவசாயக் கழகம்:

ஒரு நாட்டில் உள்ள மாணவர்களின் ஆர்வமும், இயல்பூக்கமும் வேறுபட்ட பல துறைகளைச் சார்ந்து செல்வதொன்றாகவே இருக்கும். எந்த எந்தத் துறைகளில் மாணவர்களின் இயல்பூக்கம் அதிகரிக்கின்றதோ, அந்தந்தத் துறைகளில் அவர்களை இணைப்பது சமூகத்தின் கடமை. இந்த வகையிலே உருவானதே மாணவர் விவசாயக் கழகம் ஆகும். எமது மண் விவசாயத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டு வந்துள்ளது. மாணவர் அத்துறையில் வழமையாகவே, குடும்ப ரீதியில் கணிசமான அளவு ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் விவசாய அறிவினை புதிய தேவைக்கு ஏற்பவும், உலக முன்னேற்றங்களுக்கு ஏற்பவும் இணைத்துக் கொள்ள வசதி இல்லாது உள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, அக்குறையை நீக்கி மாணவரிடையே விவசாய அறிவினைப் பெருக்கவும், அவர்கள் செயற்பாடு விவ்சாயத்தில் ஈடுபடவும், அத்துறையில் ஆர்வம் கொண்டு, ஆனால் வசதியின்றி இருக்கும் ஏழை மாணவர்களை இனங்கண்டு, அவர்களின் ஆற்றலை இணைத்து விவசாயத்தில் புதிய முறைகளை, புதிய இனங்களை, புதிய பயிர்களை அறிமுகப்படுத்தவும் விடுதலைப்




## இது எங்கள் தேசம்

**முல்லை கலை பண்பாட்டுக் கழகத்தின் மற்றும் ஒரு கலைப்படைப்பு.**

**யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில், அண்மையில் 'இது எங்கள் தேசம்' வீடியோ திரைப்படம் வெளியீட்டு வைபவம் நடைபெற்றது. அன்னை பூபதியின் வரலாற்றை பின்னணியாகக் கொண்டு, இந்தக் கலைப்படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது முல்லை கலை பண்பாட்டுக் கழகத்தினரின் இரண்டாவது படைப்பாகும். முன்னரும் மாவீரர் நாளையொட்டி 'தமிழோசை' எனும் கலைப்படைப்பை இவர்கள் உருவாக்கியிருந்தார்கள். இக் கலைப்படைப்பு போராட்ட வாழ்வியலை சித்தரிக்கும் உன்னத சிறப்பம்சங்களோடு வெளிவந்திருக்கிறது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புலிகளின் மாணவர் அமைப்பின் விவசாயக் கழகம் முயலும். இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை உருவாக்கிக் கொடுக்கும். மாணவர்களே ஈடுபட்டு, அவர்களே உழைப்பின் பலாபலன்களைப் பெற்றுக் கொள்ளவும், அதன் மூலம் ஏழை மாணவர்களை வாழ்க்கையில் பிடிப்புக் கொள்ளச் செய்யவும் இக்கழகங்கள் உதவும். இவை கொத்தணி மட்டத்தில் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும்.

## மாணவர் முதலுதவி அணி:

மாணவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் வளர்ச்சியடைதல் சமூகத்தின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்ற மிக அவசியமானவை. ஆரோக்கியமற்ற மனப்பாங்கு விருத்தியடையாத நிலையில் இருக்கும் மாணவர்களைக் கொண்டே சமூகங்களின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவை இயல்பாகவே தடுக்கப்பட்டு விடுகின்றது. இந்த மண்ணில் அத்தகைய ஒரு தேக்க நிலை உண்டு. முதலுதவிப் பயிற்சி என்பது, அவசர காலத்திற்கு மட்டும் தேவையான ஒன்றல்ல. அது வாழ்க்கை பூராவுமே தேவைப்படுகின்ற ஒன்று என்பதை உணரச் செய்வது அவசியமாகின்றது. கற்ற சமுதாயம் ஒன்று முதலுதவிப் பயிற்சி அறிந்திருக்காவிட்டால், அக்கல்வியே உபயோகமற்றதாகிவிடும். தமக்கு வரும் வினையைத் தானே தீர்க்கும் ஆற்றலை மாணவர் பெற்றிருக்கும் போது, சமூகத்தில் பல பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன. இத்தகைய பயிற்சியை பாடசாலை ரீதியாக அப்பாடசாலைகளிலேயே வழங்க விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுக்கும். இப்பயிற்சியைப் பெறுகின்றபோது உடல், உள ரீதியில் மாணவர் வலிமை பெறுவர். பொது அறிவு, பொது உளச்சார்பு, உடல் நலம்:

மாணவரின் ஆற்றலும், அறிவும், சமூக விடயங்களையும் அறிந்து கொள்கின்ற போது புத்துணர்வினைப் பெறுகின்றன. சார்ந்து வாழும் சமூகப் பிரச்சினைகளை, வளங்களை, பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகளை, கலை கலாச்சாரப் பண்புகளை, வரலாற்று விழுமியங்களை, மாறி வரும் உலகப் போக்கினை மாணவர் அறியவேண்டியுள்ளது. பொது உளச்சார்புப் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வுகாணும் ஆற்றலை வளர்க்கின்றது. மிகக் குறுகிய வேளையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பயிற்சி பெறுதல் அவசியம். புத்தியைத் தீட்டத் தீட்டத் தான் அது கூர்மை பெறும். அது தீட்டப்படாவிட்டால் மழுங்கடிக்கப்படும்.

இந்த வகையிலே மாணவரிடையே பொது அறிவை வளர்க்க அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வினையும், பொது வுளச் சார்பினை வளர்க்க மேஜர் முரளி புதிர்ப் போட்டிகளையும் மாணவரிடையே மறைந்தும் வெளிக் கொண்டு வரப்படாதுமிருக்கும் விளையாட்டுத் திறன்களை வெளிக் கொண்டு வர விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி உடல் நலத்தை உயர் நிலைக்குக் கொண்டு வரவும் வேண்டும். வேறு அவசியமான போட்டிகளை எல்லா மட்டத்திலும் நடத்துவதோடு, அதற்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுப்பதையும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு செயற்படுத்தி வரும். அத்துடன் மாணவர்களின் கலை ஆக்கத்




கரும்புலிகள் தினம் தமிழீழத்தில் தமிழீழ மக்களால் கொண்டாடப்பட்டது. உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப் பட்டது. இத்தினத்தில், சிலம்படி, போர்த்தேங்காய் அடித்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும் விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



திறனை வெளிக் கொண்டு வரவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தனது வேலைத் திட்டங்களை பின்வரும் துணை அமைப்புகள் ஊடாக செயற்படுத்தி நிறைவேற்றும்.

**துணை அமைப்புக்கள்:**

01. மாணவர் அறிவியல் (விஞ்ஞான) கழகம்.

02. மாணவர் தொழில் நுட்பக் கழகம்.

03. மாணவர் விவசாயக் கழகம்

* 04. மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகம்

* 05. மாணவர் முதலுதவி அணி

* இத்துணை அமைப்புக்கள் தனியான அமைப்பு விதிகளைக் கொண்டிருக்கும்.

■■




சிந்திய இரத்தம்
நினைவில் தெறிக்கும்

விடுதலை காணவிழைந்த
விழிகள் தோண்டி,
கனல் தெறிக்க முழங்கிய
நாவு அரிந்து,
உடல் பிளந்து
உயிர் சிதைத்து
புத்தனின் பாதத்தில்
அர்ப்பணம் ஆனதும்,
பச்சை இரத்தம் தெறித்து
போதி மரத் தளிர்கள் நனைந்ததும்
மனதின் பரப்பெங்கும்
ரணங்களை விதைக்கும்.

* * *

இன்னும் வெலிக்கடைச் சிறையின்
நீள மதிலும்
சின்ன முற்றத்தில் நிமிர்ந்த
போதி மரத்தின் நிழலில்
நிஷ்டையில் அமர்ந்த
புத்தனும்-

சிறைகளின் பின்னே
நம்பிக்கை சுமந்து
கனல்கின்ற விழிகளும்
கறுப்புப் போர்வையில்
நிசப்தம் இறுகி
நீள்கின்ற இரவும்

நீள மதிலும்
இரும்புக் காவலுமாய்
வெலிக்கடைச் சிறைச்சாலை.
சின்ன முற்றத்து வெளியில்
அரச மரத்தின் வேர்களின் மடியில்
ரத்த நெடில் சுமந்த
காற்றின் அணைப்பில்
தியானம் செய்யும்
புத்த பரி நிர்வாணம்.

* * *

அம்மா.......ஆ
இரவின்
மௌனச் செவிகளில்
அறையும் மனிதக் கதறலில்
வேதனையின் ஈரம்
ஒட்டிக் கிடக்கும்
அவலத்தின் சாயல்
பற்றிக் கிடக்கும்


1983 யூலை
நினைவில் உரச
இதயம் நின்று துடிக்கும்
விடுதலை நேசித்த
வீர புருஷரும்
சுதந்திரம் யாசித்த
அப்பாவி மனிதரும்

-கஜன்-

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

# மேஜர் விசு



"விசுவோட பழகினா அவனில் வெறுப்பு வைக்க மாட்டீங்கள். அந்தமாதிரித் தான் பழகுவான். பொதுவா, எல்லாரையும் எல்லாருக்கும் பிடிக்காது. ஆனா விசு எல்லாருக்குமே பிடிச்சவனா நடந்து கொள்வான். ஒவ்வொரு விசயத்தையும் தெளிவா, ஆறுதலா எல்லோருக்கும் விளங்கக் கூடிய மாதிரிக் கதைக்கிற தன்மை அவனில் இருந்தது. அதனாலதான் இயக்கத்துக்கு புதிசா வந்த பொடியளெல்லாம் விசுவில அன்பாய் இருந்தாங்கள். இவன் அவையோட பழகிறமுறை, போராட்டத்தைப் பற்றி விளங்கப்படுத்துற முறை வேறு ஆராலையும் மறக்கமுடியாது." இது வன்னிப் பகுதியில் விசுவின் காலப்பகுதியில் பணியாற்றிய ஒரு போராளியின் அனுபவங்கள்.

எப்போதும் சீராக உடையணிந்து, சிரித்த முகத்துடனே காணப்படும் இவனை எளிதில் எவரும் மறந்துவிட முடியாது தான். இவன் இயக்கத்துடன்



**மேஜர் விசு**

*(இராசையா அரவிந்தராம்)*

*வீரச்சாவு: 13-07-1989*

தொடர்பு கொண்ட காலத்தில், இரட்டை இலக்கத்தில் மட்டுமே அங்கத்தவர்கள் இருந்தனர். புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக பிரபலம் அடைந்திருந்தாலும், அங்கத்தவர் தொகை அந்தளவிலேயே இருந்தது. புலிகள் யாரென்பதை இனங்காண்பது கடினம். ஆனாலும், புலிகளைச் சந்திக்க வேண்டும் என்று விசுவும், அவனது நண்பனொருவனும் ஆவலாயிருந்தனர். ஏனெனில் அக்கால கட்டத்தில் புலிகள் இயக்கத்தின் பெயரால் மோசடிப் பேர்வழிகள் துண்டுப் பிரசுரம் விடுத்துக் கொண்டிருந்தனர். தாங்களே உண்மையான புலிகள் இயக்கம் என்ற மாயையை மக்கள் மத்தியில் திணிக்க முயன்று கொண்டிருந்தனர். தமது சகாவான சுந்தரத்தைப் பிரபாகரன் குழு கொன்றுவிட்டதாக ஓங்கி ஒலித்தனர். யார் உண்மையான புலிகள் எனத் தெரியாத நிலையில் விடுதலை விரும்பிகள் தத்தளித்தனர். ஒரு நாள் இயக்கத்தின் துணைத்தலைவராக விளங்கும் மாத்தையா சைக்கிளில் துண்டுப் பிரசுரம் விநியோகித்தபடி வந்தார். "துரோகத்துக்குப் பரிசு" என்ற தலைப்பிலான அந்தத் துண்டுப் பிரசுரத்தில், சுந்தரம் மீது மரணதண்டனை விதிக்கப்பட்டமைக்கான

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

காரணங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தன. கட்டுப்பாடான அமைப்பைக் கொண்ட இயக்கத்திலிருந்து, இயக்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கியுடனும் பணத்துடனும் மறைந்தமை இயக்கக் கட்டுப்பாட்டை மீறித் தனியொரு இயக்கம் ஆரம்பிக்க முற்பட்டமை ஆகிய காரணங்களுக்காக இத்தண்டனை வழங்கப்பட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. புலி இலச்சினை பொறிக்கப்பட்ட அந்தச் சின்னத்தைக் கண்டதும் உண்மையான புலிகளைக் கண்ட மகிழ்ச்சியிற் திளைத்தனர் விசுவும், அவனுடைய நண்பனும்.

இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர். அவ்வேளை, ''உங்களது கோரிக்கை ஆராயப்படும்'' எனப் பதில் கிடைத்தது.

அந்தக் காலத்தில் இருந்த வடிகட்டல் முறையில் இவர்கள் தேறினர். எனவே, இவர்கள் ஆதரவாளர்களாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் ஜீப் மீதான முதலாவது தாக்குதலுக்கு விசுவே தகவல், மற்றும் தங்குமிட ஏற்பாடுகளையும் கவனித்தான். எத்தனை மணிக்கு ஜீப் வருகிறது? என்னென்ன ஆயுதங்கள் வைத்திருக்கின்றனர்? எத்தனை பேர் வருகின்றார்கள்? எல்லாம் தினசரி குறிப்பெடுத்து வழங்கியதன் மூலம், அதற்கேற்றவகையில் திட்டமிட்டு அத்தாக்குதல் வெற்றிகரமாக அமைவதற்கு உதவி செய்தான். அத்தாக்குதலில் நான்கு சிறிலங்காவின் பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

காரைநகர் முகாமிலிருந்து புறப்பட்டுவரும் கடற்படையினருக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்வதற்காக பொன்னாலைப் பாலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி எதிர்பாராத விதத்தில் வெற்றியளிக்காது போகவே அங்கிருந்து வானில் தப்பிச் சென்ற போராளிகள் நேரே இவனிடந்தான் சென்றனர். இந்தமாதிரியான நேரங்களில் விசுவிடம் போவதே அனைவருக்கும் பாதுகாப்பு எனக் கருதினர் போராளிகள். எல்லோரையும் மறைத்து வைத்திருந்து, காப்பாற்றிப் பத்திரமாக அனுப்பி வைத்தான். போராட்டம் வளர்ச்சி பெறாத காலத்தில் இதெல்லாம் மதிப்பிட முடியாத பணிகள்தான். அடுத்த வீட்டுக்கே தெரியாமல் இவ்வளவும் செய்ய வேண்டும். விசுவால் அது முடிந்தது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்களப்படையினருக்கு பௌத்த பிக்கு பரிசில்

**வடக்கு கிழக்கில் போரில் ஈடுபட்டுவரும் சிறிலங்காப் படையினருக்கு, உற்சாகமூட்டுவதற்கு பௌத்த பிக்கு ஒருவர் ஈடுபட்டு வருகிறார். இதற்காக 'சிங்கள மகாஜன பெரமுன' என்ற அமைப்பைச் சேர்ந்த வண. திசதேரோ என்ற பிக்கு படையினருக்கு பரிசில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். பொதுமக்கள் படையினருக்கான பரிசில்களை தமது அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தொடர்ந்து 1983 ஆம் ஆண்டில் இவன் முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டான். இராணுவப் பயிற்சிக்காகக் கடல் கடந்து சென்ற அவன், பயிற்சி முடிந்ததும் அரசியல் வேலைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் கற்கலானான். அது முடிந்ததும் தாய்நாட்டிற்கு மீண்டும் திரும்பிய இவன், வன்னி மண்ணில் எதிரிகள் மீது இலக்குப் பார்த்தான். எண்ணற்ற தாக்குதல்களை நடாத்தினான். அத்தாக்குதல்கள் இவனது தனித்திறமையைப் பறைசாற்றின. நாளடைவில் இவன் குழுத்தலைவனானான். யாழ் கண்டி வீதியில் 18ம் போர் எனுமிடத்தில் நிகழ்ந்த சிறீலங்கா இராணுவத் தொடரணி மீதான தாக்குதல், கிளிநொச்சி நகரைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பன 'துணிச்சலுக்கு விசு' என்ற பெயரைப் பெற்றுத் தந்தன. வன்னி மண்ணில் விசு போகாத இடமேயில்லை. அடுத்தடுத்த ஊர்களை மட்டுமல்ல, அடுத்தடுத்த வீட்டுக்காரரின் பெயர்களைச் சொல்லக் கூடிய அளவிற்கு வன்னி மண்ணோடு இவன் பரிச்சயமானான். ஒரு தரம் இவன் ஒரு வீட்டிற்குச் சென்றாற் போதும். அதன் பின் அந்த வீட்டில், அதன் பின் அந்த வீட்டிற்கு எந்தப் போராளி சென்றாலும் "விசு எப்படி இருக்கிறார். நாங்கள் விசாரித்ததெண்டு சொல்லுங்கோ." எனுமளவிற்கு வன்னி மக்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட ஒப்பரேசன் விபரேசன் நடவடிக்கையின் பின் நெல்லியடியில் உள்ள மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது நடைபெற்ற முதற் கரும்புலித் தாக்குதலில் இவனது பங்கு மகத்தானது. இது இவனின் சொந்த இடமாகையால், மேலதிகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. முகாமினுள் நுழைந்த முதற் குழுவினுள் ஒருத்தனாகவும் இருந்தான். இவனோடு கூடச் சென்ற கமலும் வின்சனும் மரணித்தனர். இவனது கண்ணிலும் ஏதோ ஒரு சிதறல் பறந்து வந்து தாக்கியது. இதனால் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வைத்தியத்திற்காக இந்தியா சென்றான். இந்திய இராணுவத்துடனான மோதல் தொடங்கியதும், இவனுக்கு தான் ஒரு நோயாளி என்பதை விட, தான் ஒரு போராளி என்ற உணர்வே தலைதூக்கியது. பூரணமாகக் குணமாகாத கண்ணுடன் தமிழீழத்தை வந்தடைந்தான். இந்திய இராணுவத்துடனான மோதல்களில் இவன் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், உளவுப் பிரிவின் பொறுப்பும் இவனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிக்குச் சரியான தலைமை, தியாக உணர்வு என்பவற்றுடன் தகவற் தொடர்பு, உளவு என்பனவும் முக்கியமானவையாகும். இந்த இரண்டிலும், அந்த விடுதலை இயக்கம் போதுமான வளர்ச்சியைப் பெற்றிருக்காவிடின், விடுதலை விரிவு படுத்தப்படமாட்டாது. இப்படியான பொறுப்பு மிக்க பணிக்கு இவன் நியமிக்கப்பட்டதிலிருந்து, இவன் மீது இயக்கத் தலைமை கொண்டிருந்த நம்பிக்கையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எங்கள் தேசிய இன விடுதலையைத் தமது சொந்த நலனுக்காக விற்ற துரோகிகளுக்கான தண்டனை வழங்கப்பட்டேயாக வேண்டும். துரோகிகளுக்கான தண்டனையை விரைவுபடுத்தாவிடில், தமிழீழ மண்ணில் மரணங்கள் தொடர்கதையாக இருக்கும். எனவே, "புகை போகாத இடமெல்லாம் புலி போகும்" என்ற புதுமொழியை நிரூபிக்கப் புறப்பட்டான் விசு.

இப்பணியை மேற்கொள்ளும்போது, தான் திரும்பி வர முடியாது என இவனுக்கும், இவனது தோழர்களுக்கும் நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் துரோகிகளைத் தேடிச் சென்றனர். அங்கே, "இத்தாலிய இளைஞர்களை கரிபால்டி அழைத்ததுபோல, இங்குள்ள இளைஞர்களை நான் அழைக்கின்றேன்" என்ற

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முழக்கமிட்ட அமிர்தலிங்கம், சிங்களச் சிப்பாய்களின் துப்பாக்கிகளில் நம்பிக்கை வைத்தபடி....

எந்தப் படையென்றாலும், எந்த நகரமென்றாலும், புலியின் கடமை ஒன்று நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அது நிறைவேறியேயாகும் என விசுவினதும், தோழர்களினதும் துப்பாக்கிகள் உயர்ந்தன.

தனிநாட்டுக் கோரிக்கை தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று ஒரு காலத்தில் கூறியவருக்கு, தனிநாட்டுக்கான போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பது தற்கொலைக்கு ஒப்பானது; துரோகத்தனமானது என்று வரலாறு கூறிற்று.

'துரோகத்துக்குப் பரிசு' என்ற பிரசுரம் கையிற் கிடைத்ததன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்ட விசு, துரோகத்துக்குப் பரிசு கொடுத்த பின், தன்னை இந்த மண்ணுக்குக் கொடுத்துக் கொண்டான். கூடவே தோழர்கள் இருவரும்.

- நன்றி
விழுதுகள், ஈழநாதம் -

# கோழி தன் சிறகினால் மறைத்து..

அந்த பஸ் கடற்கரையோரமாக ஊருக்குள் வந்துகொண்டிருந்தது. ஊரை, கடற்கரைப் பகுதியிலிருந்து பிரிக்கும் வீதி தொடங்கும் இடத்தில் எங்கும் இந்திய இராணுவ சிப்பாய்கள். மகளிர் பாடசாலையின் முன் உள்ள ஒரு மதகில் இந்திய இராணுவ கப்டன் பத்மநாபன் ஏறிநின்று பார்வையிடுகிறான். கடற்கரையிலும் நிறைய சிப்பாய்கள். ஏதோ ஒரு வேட்டைக்கு ஆயத்தம் செய்கிறான் போலும். "ஐயோ! காயப்பட்ட கப்டன் சதீசும், இன்னுமொரு வீரனும் ஊருக்குள் சிகிச்சை பெறுவதற்காக தங்கியிருப்பது தெரிந்துவிட்டதோ!" என பஸ்ஸில் உள்ளவர்கள் திகைத்தனர். இப்போராளிகளின் சிகிச்சை பெறும் விடயம் ஊரில் அனைவரும் அறிந்ததே. ஊர் மக்களிடம் புலிகளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

இதற்குள் பஸ் சந்திக்கு வந்துவிட்டது. இறங்கியதும் அவசர விசாரணை. "என்ன பிள்ளையார் கோவிலடியில் ஆமி நிக்கிறான்?"

ஒருவர், "இராசநாயகம் மாஸ்றறை மகன் பிடிபட்டிட்டான் எல்லே!"

"ஐயோ, அவன் காயப்பட்டிருக்கிற கப்டன் சதீஸ் ஆக்களோட போய் கதைக்கிறவன் எல்லோ! அடி ஆக்கினேல ஏதும் சொல்லிப்போட்டான் போல இருக்கு!"

"பொடியள் அவங்களைத் தூக்கிக் கொண்டு வரப் போறாங்கள். அவங்கள் கொண்டு வந்திடுவாங்கள்." மக்களுக்கு புலிகளில் அவ்வளவு நம்பிக்கை.

பஸ்ஸை விட்டு இறங்கியவர்கள் சந்திக்கு வரும்போது அங்கு, இந்திய இராணுவ சிப்பாய்கள் வெறியுடன் நீட்டிய துவக்குகளுடன் ஓடிவந்துகொண்டிருந்தார்கள்.

கறிக்கடை ஒழுங்கையில் இருந்து, மக்கள் பதட்டத்துடன் "ஆமி பொடியளைக் கண்டிட்டாங்கள்" என்றபடி பிரதான வீதிக்கு ஓடிவந்தார்கள். "ஆமி கடற்கரையாலை ஓடிவாறான்."

அட! அவ்வொழுங்கையால் மண்ணின் மைந்தர்கள். ஜேம்ஸ், ஜொனி, தீபன், யோக்கின் இன்னும் சிலர்.தமிழ் மண்ணின் காவலர்களல்லவா?

காப்பாற்றும் முயற்சிக்கு தடையாக மட்டுமல்லாமல், ஆபத்தாக இந்திய இராணுவத்தினர்.

பெருவீதியைக் கடந்தால், அதன் நேரே உள்ள சிறு ஒழுங்கையால் அவர்கள் அவ்வெறியர்களிடமிருந்து தப்பிவிடுவர். தப்பிவிட வேண்டும் என்பதே எல்லாருடைய அவாவும்.

நேரமில்லை. அவர்களோ அண்மித்துவிட்டார்கள். தேனீர்க்கடை மகாலிங்கப்பா, "டேய், என்னடா பாத்துக்கொண்டு நிக்கிறீங்கள். றோட்டை மறைச்சு எல்லாரும் நில்லுங்கோ." ஏறத்தாழ அங்கு நின்ற 60 பேர் றோட்டை இராணுவத்திற்கு மறைத்தபடி நின்றனர். இவர்கள் நொடியில் பெருவீதியைக் கடந்து மறைந்தனர். மக்கள் மனதில், அவ் வீரமறவர்கள் எதிரியிடம் சிக்கக் கூடாது. எப்படியாவது, எம்மில் பாதிப்பேர் செத்தாலும் பரவாயில்லை; அவர்கள் தப்பிவிட வேண்டும்.

சந்திக்கு வந்த வெறிபிடித்த இந்திய சிப்பாய்கள் வழக்கம் போல் மக்களை.....


ஆனால் ஊர் சுற்றிவளைக்கப்பட்டு தேடப்படும்பொழுது, கல்விமன்றத்திற்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த கப்டன் சதீசும், மற்ற வீரனும் எதிரியிடம் சிக்காமல் நஞ்சருந்தி மாவீரரானார்கள்.


காயப்பட்டவர்களை காப்பாற்ற முடியவில்லை என்ற ஆதங்கத்திலும், காப்பாற்றச் சென்றவர்களை காப்பாற்றியதில் மக்களுக்கு ஒருவித திருப்தியே.

- சிறீ -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்









www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வீரர்







# திகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எங்கள் வீதியை

வீதியில் போகும்போது விபத்து நேராதிருக்க
விதிமுறை உள்ளன; விதிமுறை உள்ளன

விதிமுறை இருந்தும் விதிமுறை இருந்தும்
ஒதுங்கியே செல்லும் பாதசாரிகளின்
உயிர்களுக்கு ஏதும் உத்தரவாதமே இல்லை.

உறுமியே செல்லும் ராணுவ உந்துகளின்
உள்ளிருந்து இயங்கும் துவக்குகளாலே
எந்நேரமும் இவர்தலை சிதறலாம்
எந்தச் சமயமும் எம்தலை உருளும்.
ஒதுங்கியே செல்லினும் ஒதுங்கியே செல்லினும்
எம்முயிர்க்கு இங்கு உத்தரவாதமே இல்லை.

சேதிகள் வருவன நாள்தோறும்
வீதியின் நடப்புக்கள் விபத்துக்கள் அல்லவே.

இப்போதெல்லாம்
எமது நகரத்து வீதிகள்
காவற் கருவிப் பேய்களுக்கென்றே
எழுதப்பட்டதாய் போனதே போலும்.

'எவரையும் சுடலாம் விசாரணையின்றியே
எரிக்கலாம் அன்றிப் புதைக்கலாம்' என்று
இயற்றப்பட்ட புதிய விதிகளால்
குருதியில் தோயும் நிகழ்வுகள் இங்கே.

இருளுக்கும் இருட்புலையர்க்கும் என்றே
விடப்பட்டுப் போன எங்கள் வீதியில்
வெளிப்படுவோரெல்லாம்
சுடப்படலாம் தெருநாய்களைப் போல.
எங்கணமேனும் எங்கணமேனும்
எமக்கிது நிகழலாம்.




குருதியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தே
கொழுத்துப் போகும் இரவுகள் நீளலாம்;
கடித்த ரத்தமாய் இரவுகள் தடிக்கலாம்.

வீதிகளை இருள் அரக்கனே ஆள
மின்விளக்கு அணைத்தே வீட்டினுள்
கூடியிருந்து பீதி வளர்ப்பவர் மத்தியில்
எத்தனை இரவுகள் இப்படிக் கழியலாம்?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எமக்கென மீட்போம்

குருதியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தே
கொழுத்துக் கிடக்கும் இருளரக்கனைத் தறிக்க
கோடரி ஏந்தி யார் வெளிவருவார்?

வீட்டினுள் பதுங்கி இருந்தே பீதியில்
ஓரிரா ஈரிராக் கழியலாம்;
எத்தனை இரவுகள் இப்படிக் கழியலாம்?

எத்தனை காலம் எங்கள் பூமியை
இருளரக்கனிடம் ஒப்படைத்திருக்கலாம்?

தூரத்தே விழும் எரி நட்சத்திரமல்ல,
உன் அயலவன் வீட்டு முகட்டிலே அரக்கர்
வீசி எறியும் தீப்பந்தம்.

தூரத்து இடியல்
அதோ அடுத்த வீதி வளையில்
அவன் தீர்க்கும் வேட்டொலி.

வீங்கிருள் நிகழ்வுகள் இவையே ஆக
வீட்டினுள் உயிரோடு எத்தனை நாட்கள்?
வீடு நிறைந்த பீதி விடுத்தே
கோடரி ஏந்தி அனைவரும் வருக.

எங்கள் இரவை எமக்கென மீட்போம்
எங்கள் வீதியை எமக்கே ஆக்குவோம்.

இன்றைய இரவை அவனிடம் இழந்தோம்,
இனிவரும் பகலும் எமதென்பதில்லை;
எங்கள் வீதியை அவனிடம் இழந்தபின்
எங்கள் முன்றிலும் எமதென்றில்லை.

எங்கள் முன்றிலும் எறிந்த நிலவுமாய்
இன்புறு நாட்கள் என்றோ தொலைந்தன
இருட்டுள் சீவியம் எத்தனை நாட்கள்?

வீடு நிறைந்த பீதி விடுத்தே
கோடரி ஏந்தியே யாவரும் வருக
விழுதுகள் ஊன்றிய இருளரக்கனைத் தறிப்போம்.

எங்கள் வீதியை எமக்கென மீட்போம்;
எங்கள் முன்றிலை நிட்சயம் செய்வோம்.

– சு. வில்வரத்தினம் –

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எழுந்தான்

**பு. சத்தியமூர்த்தி**

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது. அவிழ்ந்த நெல்லிக்காய் மூடைபோல மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர். சத்தியன் மிதிவண்டியை உருட்டியபடியே வெளியே வந்தான்.

கே.கே.எஸ். வீதியூடாகப் போய், கோட்டையைக் கடந்து, பண்ணைத்தாம்போதி வீதியின் இரு மருங்கும் பார்த்தபடியே மிதிவண்டியை மிதித்தான். மதகுகளின் அருகில் மீன்குஞ்சுகள் ஆயிரக்கணக்கில் நீந்திக் கொண்டிருந்தன. சற்றுத்தூரத்தில் புதைக்கப்பட்டிருந்த "களங்கண்டி" வலையில் கருமையும், வெண்மையுமாய் கடற்பறவைகள் மீன் தின்னுவதற்காகக் கூடியிருந்து சிறகடித்தன. கடலைத் தழுவிவரும் காற்று, சுகமாக உடலைத் தழுவிச் சென்றது. ஏழுகண் பாலத்தடியில் மீனவர்கள் வீச்சுவலையில் வீசி மீன்பிடித்துக் கொண்டிருக்க, இளைஞர்கள் சிலர் கடலில் நீந்தியவாறே தண்ணீரால் ஒருவருக்கொருவர் ஏற்றிக் கூச்சலிட்டுச் சிரித்தனர்.

'றேடியோ சிலோன்' வெளியினுள் புகும்போது தெருவோரம் அமைந்திருக்கும் வழிப்பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். வெளியில் ஏராளமான மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுவர்களோ ஈச்சம்பழம் பிடுங்கித் தின்றபடி. கண்ணுக்கெட்டிய தூரத்தில் "பிசறீஸ் பக்ரறி"யின் புகை போக்கியால் கருமேகமென பெரும் புகைத்திரள் வானத்தில் பரவிக்கொண்டிருந்தது.

ஊரி வயல் வெளியைக் கடந்து செல்லும் போது சூடடிப்பதற்காக குவிக்கப்பட்டிருந்த நெற்போர்களைக் கண்ட சத்தியனுக்கு மனம் பூரித்தது.

அடர்ந்த, பரந்த பனை வெளியிற்கூடாக குடிமனைக்குள் புகுந்து பிள்ளையார் கோவிலடியில் இருக்கும் தனது வீட்டிற்கு வந்தான். முற்றத்தில் அப்பா ஆக்ரோசத்துடன் கத்தியபடி நிற்பதைக் கண்டவனுக்குத் திக்கென்றது. எதிர் வளவினுள் அவனது மாமாவும், வேறுசிலரும் அவ்வாறே. கோபத்தால் கம்மிய குரலில் அப்பா கத்துகிறார் "என்ரை உயிருள்ள வரை இந்த நிலத்திலை ஒரு துண்டையெண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்."

சத்தியனதும் அவனது மாமாவினதும் காணிகள் அருகருகே உள்ளன. வேலியை மாமாதான் அடைப்பது வழக்கம். மாமா வேலியடைக்கும் போது கதிகால்களைச் சற்று வெளிப்புறமாக நட்டு அடைத்துவிடுவார். இதை அப்பா நயமாகச் சொல்லித் தடுக்க முற்பட, மாமா பயமுறுத்தி அவரை விரட்டிவிட்டார். இது அப்பாவுக்குச் சினத்தைக் கிளறவே, உருத்திரமூர்த்தியாக இன்று முற்றத்தில் நிற்கிறார்.

* * *

1990 யூன் யுத்தம் வெடித்தது. சத்தியன் பாடசாலைக்குச் செல்லவில்லை. தீவுகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பிரதான பாதை துண்டிக்கப்பட்டது. அராலியால் பயணம். பாடசாலைகள் அலுவலகங்கள் எதுவுமே இயங்கவில்லை.

தினமும் இயந்திரத் தும்பிகளும், இயந்திரப் பறவைகளும் எந்தவேளையிலும் எச்சமிட்டுத் திரிந்தன. ஒருநாள் பட்....படீர்...எனப் பெரும் ஓசைகள் தென்திசையில் கேட்கத் தொடங்கின. "நெருஞ்சிமுனையில் ஆமி இறங்கியிட்டானாம்." ஊரவர்களிடையே பதற்றம். உயிருக்கான நடுக்கம். இப்போது சத்தியனது மாமாவும் அப்பாவும் வேலிக்கு மேலால் பதற்றத்துடன் கதைக்கிறார்கள், இருவரது முகமும் வெளுத்திருக்க.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அதிகாலை 2 மணி. கடலில் இருந்து வாணங்கள் வருவது போல மழையெனக் குண்டுகள் ஊருக்குள் விழுந்து வெடிக்கத் தொடங்கின. அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி பங்கருக்குள் பதுங்கிக் கொள்ள அம்மா எல்லாக் கடவுளரையும் அழைத்துக் கும்பிடுகிறாள். வானில் வல்லூறுகளும், தும்பிகளும் தம் கீதத்தைப் பாடத் தொடங்கின. மரங்கள் முறிய, நிலம் அதிர, வீடுகள் சரிய எல்லாரும் கோயிலை நோக்கிப் படையெடுக்கின்றனர். கோயிலுக்கு மேல் தும்பியொன்று தாழப் பறந்தபடியே சடசடக்க கோயிலுக்குள் சனத்திரளின் கூக்குரல்கள்; அலறல்கள்.

சத்தியனது சிந்தனை அவ்வூரில் இருக்கும் போராளிகளையே சுற்றி வந்தது. இவ்வளவு குண்டுகளிற்கும் நடுவில் என்னதான் செய்கிறார்களோ? அவனுடன் ஒன்றாகப் படித்து, உண்டு உறங்கி, விளையாடிய பலரும் அவ்வகையில்.


"டுடோம்".... திடீரென மிகவும் அருகில் பெரும் ஓசை. காதுகள் அடைத்து, உடல் பதறப் புகையும், கந்தக நெடியும் எங்கும் பரவுகிறது.

"கோயில் வீதியில் விழுந்து வெடித்தது." அனைவரும் சுவர்களோடு, ஒருவருக்குள் ஒருவர் பதுங்கியபடி.

**அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி, கோயிலுக்கு முன் அநுமன் வாலென நைலோன் கயிற்றால் கைகள் பிணைக்கப்பட்ட இளைஞர்களின் வரிசை. பரிதாப முகங்கள்; சட்டைகள் கிழிந்து தொங்க இரத்தக் கோடுகளுடன்.**

பச்சை உடைகளும், பயங்கர முகங்களும் கோயிலுக்குள் பிரசன்னமாக எங்கும் விபரீதமான அமைதி. இராணுவச் சப்பாத்துகளின் ஒலியும், சிங்கள உறுமல்களும், துப்பாக்கிளை அசைக்கும் ஒலியையும் தவிர வேறு சத்தமே கிடையாது. குழந்தைகள் கூட மூச்சின்றி இருக்க, அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி, கோயிலுக்குமுன் அநுமன் வாலென நைலோன் கயிற்றால் கைகள் பிணைக்கப்பட்ட இளைஞர்களின் வரிசை. பரிதாப முகங்கள்; சட்டைகள் கிழிந்து தொங்க இரத்தக் கோடுகளுடன். வெளியே ஒருவன் பெரிய நைலோன் கையிற்றுச் சுருளுடன் நின்றான். பாசக் கயிற்றுடன் நிற்கும் யம கிங்கரனோ?

ஓவியம்: மகா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஒவ்வொரு ரூபாவிலும் 20 சதம் தேச பாதுகாப்பிற்குச் செலவு.

“இப்போது, ஒவ்வொரு ரூபாவிலிருந்தும் 20 சதம் தேசிய பாதுகாப்பிற்கு என ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. ஆகையால், தொடரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம்” என்று, தேயிலை வர்த்தக சங்கத் தலைவர் மைக்கல் டி. சொய்சா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கலந்துகொண்ட கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

பிள்ளைகள் அம்மாவை நெருங்கி அவளுடன் ஒண்டியிருக்க, தாய் அவர்களை நடுங்கும் கரங்களால் அணைத்துக் கொண்டிருந்தாள். அனைவரும் இதே நிலையில். பச்சைத் தலைகள், தாடியுடன் திரியும் ஏவல்கள் பேய்களுடன் வருகின்றன. சுழன்று உருளும் ஆந்தை விழிகள், இளைஞர்களின் முன்னே நின்றுமுகத்திற்கெதிரே “ம்” என்ற உறுமலுடன் கையைச் சுண்டுகின்றான். அவர்கள் நடுங்கியபடி எழுந்து நிற்க, தாய்மார் உறவினர்கள் துப்பாக்கி முனையில் அமர்த்தப்படுகின்றனர். அதையும் மீறுபவர்கள் ஆக்ரோசமாகத் தாக்கப்படுகின்றனர். இளைஞர்கள் அவர்களால் அழைத்துச் செல்லப்பட எங்கும் ஓலம்; மெய்த்துடிப்பு; இரத்தங்களை இழந்த பரிதவிப்பு.

* * *

“அங்கை பாரணை அம்மா.” சத்தியன் தாயைச் சுரண்ட, அங்கு சற்று முன் அழைத்துச் செல்லப்பட்ட சிலர் ரத்த மிளாறாக ரத்தம் சொட்டச் சொட்ட நிறுத்தப்பட்டிருக்க, அம்மா தலையில் கை வைத்துக் கதறுகிறாள். குழந்தைகள் பசியால் அலறின. சில மணித்துளிகளின் பின் களைத்துச் சோர்ந்து தாய்மாரின் மடியில் சுருண்டு கிடக்கின்றன.

இரண்டாம் நீள் இரவு. ஒருவன் கொச்சைத் தமிழில் “நாளைக்குக் காலை நீங்க எல்லாரும் இந்தக் கமத்தை விட்டு போறது. ஒரு மணிதாங் நாங் தாறது” எனக் கூறிச் சென்றான்.

விடிந்தது. சத்தியன் தனது வீட்டுக்குப் போனான். அங்கே ஒரு மண்மேடு, சிதலமடைந்து கிடக்கிறது. அவனுக்கு இந்த வரிகள் மனதில் ஓடின.

‘மண்மேடாய்க் கிடக்கின்ற வீடுகளைப் பாரும். இது முன்நாளில் தமிழர்களின் குடியிருப்பு ஆகும்.’

நேற்று முன்தினம் வரை அது சத்தியனின் குடியிருப்பு. இன்று மண்மேடு. உடுத்த துணியுடன் கால்நடையாகவே பரவைக் கடலைக் கடந்து போனால், அங்கும் அதே கொடூர முகங்கள். கூடவே சில கோடாரிக் காம்புகள். ஒரு ஈச்சம்பற்றையின் ஓரத்தில் நீட்டி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தபடி ஒருவர். அவர் மேலே காகம் அமர்ந்திருந்தது.

ஓ..... சொந்த ஊரை விட்டு வந்த தமக்கு தஞ்சமென அடுத்த ஊர். அம்மன் கோயிலில் அடைந்து அமர்ந்தனர். மூன்றுநாள் பட்டினி. வயிற்றைக் காந்துகிறது.

* * *


இரவு. மூன்று நாள் பட்டினிக்குக் கஞ்சி குடித்த அசதியில் அம்மா அடித்துப் போட்டதுபோல் தூங்கிவிட்டாள். அப்பாவும் அதேபோல். சத்தியனின் உடல் தளர்ந்திருந்தாலும், மனம் உறங்க மறுத்தது. சிந்தனை வேகமாகச் சுழன்றது. அவனோடு ஒன்றாகப் படித்து, விளையாடி வளர்ந்தவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட விதமும், சற்று நேரத்தில் ரத்தம் சொட்டச் சொட்ட கொண்டு வந்து நிறுத்தப்பட்ட முகங்களும், பசியால் சுருண்டு விழுந்த குழந்தைகளும், “என்ரை உயிருள்ளவரை இந்த நிலத்திலை ஒரு துண்டையெண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்.” என்று மாமாவுக்கு அப்பா சொன்ன சொற்களும், ஆனால், இன்று ஒரு மணி நேரத்தில் தங்கள் மண் பறிபோன விதமும், ஒன்றன்பின் ஒன்றாக... அவனது வீடு; அவன் பிறந்து வளர்ந்து விளையாடிய வீடு, இன்று மண்மேடாக..... அவனால் தாங்க முடியவில்லை. அசதியுடன் எழுந்தான். அவ்வளவு குண்டுகளுக்கும் இடையில் திடமான மன உறுதியுடன் நிற்கும் போராளிகளின் நினைவு வந்தது. நடக்கத் தொடங்கினான். ■■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பஞ்சமூர்த்தியின் வேணுகானங்கள்



திராவிட சமுதாயத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தமிழ் மக்களின் தனிப்பெருஞ் சொத்தான கர்நாடக இசையைத் தமிழீழத்தில் அன்றுதொட்டு இன்றுவரை நலிவுறாமல் வளர்த்து வருபவர்கள் மங்கள இசைக்கலைஞர்கள்.

பாமர மக்கள் தொடக்கம் படித்தவர்கள் வரை எல்லோரையும் ஈர்க்கும் நாதஸ்வர வாத்தியத்தின் மூலம், கீர்த்தி பெற்ற தமது தந்தையார் இணுவில் கோதண்ட பாணி அவர்களைப் போன்று நல்ல இசையை வளர்ப்பதிலும், அதை மக்கள் நயக்க அளிப்பதிலும் திறமையுடன் செயற்பட்டு வருபவர்கள் நாதஸ்வர சகோதரர்களான வி.கே. கானமூர்த்தி, வி.கே. பஞ்சமூர்த்தி ஆகிய இருவருமாகும்.

கடினமென்று எதையுந் தள்ளிவிடாது, எமது இசையிலுள்ள நுணுக்கமும், ஆழமுமிக்க அம்சங்களையெல்லாம் செவ்வனே வெளிக்கொணரும் விடாமுயற்சியும், பக்குவமும் உணர்ந்த பஞ்சமூர்த்தி அவர்கள் தனித்துவமானவர். தனது இசையறிவைக் காலத்துக்கும் சூழ்நிலைக்குமமைய மக்களுக்கெவ்வாறு பயன்படச் செய்தல் வேண்டுமென்னும் தேவையறிந்து, அவ்வழியிற் செயலாற்றுபவர் பஞ்சமூர்த்தி அவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் எமது மக்களுக்கு மூன்று அவசியத் தேவைகள் உள்ளன. ஒன்று அவர்களுடைய வீர உணர்வையும், நட்புறவையும், இன உணர்வையும் தூண்டுதல். மற்றது போரினால் பாதிக்கப்பட்டு, வீடுகளையும், உற்றார் உறவினர்களையும், உடமைகளையும் இழந்து துயருடன் வாழும் மக்களுக்கு இசைமூலம் ஆறுதலளித்துக் காத்தல். மூன்றாவது, எத்தகைய இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும், அழிப்புக்களுக்கும் மத்தியிலும் எமது வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்துக்கு அதன் கலைகளையும், பண்பாட்டையும், அவற்றின் பண்புகள் சிறிதளவும் சிதைந்துவிடாமல் பாதுகாத்துக் கையளித்தல்.

முதலிரண்டு தேவைகளையும் எமது கர்நாடக இசை நன்கு பூர்த்தி செய்யும் தகமையுடையது. வீர உணர்வும், சாந்த உணர்வும் மிக்க அம்சங்கள் எமது இசையில் ஏராளமுள்ளன.

அதிலும், பண்பட்ட நாதஸ்வர வித்துவான்களுள் ஒருவரான வி.கே. பஞ்சமூர்த்தி இவையிரண்டையும் நிறைவேற்றி வருகிறாரென்பதுக்கு அடையாளமாக அவரது இசை பொதிந்த, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய இசையருவி நாடாவும், திருவிழாக்களிலும் மற்றும் வைபவங்களிலும் அவர் வாசிக்கும் விடுதலைப் பாடல்களும் சான்று பகர்கின்றன.

மூன்றாவது அம்சம் எமது கலைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எமது இசையை முழுமையாகக் கற்று, அதன் அடிப்படை சிதைந்துவிடாமல் அதைக் காப்பாற்றி, வளர்த்து, அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது அவர்களது பொறுப்பு.

மனதுக்கு இதமூட்டவல்ல மென்மையான வாத்தியம் வேணு எனப்படும் புல்லாங்குழலாகும்.

இதையும், தனது விடாமுயற்சியினாலும், கடின உழைப்பினாலும் நன்கு பயின்று, தரமிக்க இசையை அளிக்கும் நிலையிலுள்ளார் பஞ்சமூர்த்தி அவர்கள். இவரது புல்லாங்குழல் இசை அரங்கேற்றம் அண்மையில் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் இடம்பெற்ற போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டுச் சுவைத்து, அவரைப் பாராட்டியும், கௌரவித்தும் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

இந்த வகையில், நாதஸ்வரத்துடன் புல்லாங்குழல் மூலமும் மக்களுக்கு விடுதலை உணர்வு மேலோங்க, சேவையாற்றப் பஞ்சமூர்த்தி அவர்கள் பெரிதும் உதவுவார் என்ற நம்பிக்கையுண்டு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தை 1993 எரிமலையில் வெளிவந்த "அயோத்தி பப்ரி மசூதி தகர்ப்பு" என்ற கட்டுரை குறித்து எழுதப்பட்ட கருத்துக்கள்



இந்தியாவின் ஆட்சிபீடத்தில் எத்தகைய சக்தி அமைந்திருக்கிறது என்பதானது ஈழப்பிரச்சினையை பெரிதும் பாதிக்கிறது என்ற நோக்கில் எதிர்காலம் பற்றிச் சற்றுப் பார்ப்போம். கட்டுரையில்,

1) "பட்டவர்த்தனமாகத் தெரியும் ஆரிய இந்தியா என்ற போக்கு, காங்கிரஸ் கட்சியை முழுதாக மாற்றிவிடும் அல்லது பாரதீய ஜனதாவின் ஆட்சிக்கு வழிவகுத்துவிடும். இவ்வளர்ச்சி, தமிழ் நாட்டில், தலை எடுக்கத் துடிக்கும் பார்ப்பனீய ஆதிக்கத்துடன் கை கோர்த்துக் கொள்ளவும், தமிழ்த் தேசியத்தை அழிக்கவும் முனையும். அ.தி.மு.க வுடன் ப.ஜ.க கூட்டுச் சேரமுனைவதும், சுப்பிரமணிய சுவாமியின் அதிரடி நடவடிக்கைகளும் இதனையே காட்டுகின்றன."

2) "இந்து தேசியவாதம் என்ற கொள்கை, இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்கள் உண்டென்பதை மறுப்பதாக உள்ளது. தமிழ் தேசிய இனத்தின் எழுச்சியைத் தன்னுள் அடக்கி அழிப்பதாக உள்ளது. மேலும், இந்து மதத்தினுள், இந்தியாவில் தோன்றிய சகல மதங்களையும் அடக்கும் செய்கையானது, சகல மதங்களினதும் சமத்துவத்தைக் காட்டாமல், ஏதோ ஒன்றின் மேலாதிக்கத்தையே மறைமுகமாகத் திணிப்பதாக உள்ளது. அதனை ஆழமாக ஆராய முற்படும்போது, இந்த இந்துத்துவக் கொள்கையின் மூலம் வெளிப்படுகின்றது."

3) "பாரத கண்டத்தினுள் கி.மு.2500ல் நுழைந்த ஆரியரின் வருகைக்கும், கி.மு. 1100 ஆண்டளவில் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஆரிய திராவிட (இராம - இராவண) யுத்தத்திற்கும், 20ம் நூற்றாண்டின் முடிவிற்குள் அமைய விளையும் இராமராட்சியத்திற்கும் ஒரு நீண்ட தொடர்ச்சி இருப்பதாக உணரலாம்."

4) "சகல மதங்களையும் உள்ளடக்கி சமரசம் காண்பது என்பது வேறு, ஆனால், அதனைச் சாட்டாக்கி அரசியல் அதிகாரத்தைத் தம் கையில் வைத்து மேலாதிக்கம் செலுத்துவது என்பது வேறு."

போன்றவை முக்கியமானவை.

அவைகளுக்கு விளக்கமாக......

1) "ஆரிய மாயை" என்பது தற்பொழுது தமிழகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் "சினிமா மாயை"யின் மறுவடிவம்தான்.

2) இந்தியாவில் (அயோத்தியில்) "இராமர் கோயில்" எழுப்பிய விளைவுகளுக்குப் பிறகு "இராவணன்" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதை, ஒரு சாதாரண புராணப் பிரச்சாரம் என்று ஒதுக்கிவிட இயலாது.

3) இந்து அடிப்படைவாதிகள் தற்போது ஒட்டுமொத்த இந்து ஓட்டுக்களைப் பெறுவதற்கு மட்டும்தான் முஸ்லீம்களை எதிர்த்து "அயோத்தி" நாடகம் ஆடியிருக்கிறார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அவர்களின் கொள்கை இந்திய ஆட்சி பீடத்தை எவ்வகையிலேனும் கைப்பற்றுவது தான்.

4) சமீப காலம் வரை ஒரு நோஞ்சான் கட்சியாக இருந்த பாரதீய ஜனதா கட்சிக்கு ஒரு உணர்ச்சி பூர்வமான ஆதரவு கிடைத்து வருவதானது, இந்துத்துவ அடிப்படை வாதத்திற்கு கிடைத்துவரும் மக்களின் ஆதரவு என்பது ஒரு முட்டாள்தனமான கணிப்பு. மேலும், இது பாசிசத்தை நினைவூட்டுகிறது.

5) இரண்டாம் உலகப்போரில் யூதர்களுக்கும், ஆரியர்களுக்கும் நடந்த போரை நாம் உற்றுநோக்க வேண்டியிருக்கிறது. என்றாலும், தமிழர்களெல்லாம் யூதர்களென்று நான் கூறவரவில்லை.

6) நாசி (NAZI) கட்சியின் கொடியில் இருக்கும் ஸ்வஸ்திகா (SWASTIKA * ) பல நூறு ஆண்டுகளாக இருந்து வந்த பல்வேறு எதிர்ப்பியக்கங்களின் (ANTI SEMITICS) கொடிகளிலிருந்து ஹிட்லரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த "ஸ்வஸ்திகா ( * ), பிள்ளையார், விஷ்ணு போன்ற கடவுள்களின் உள்ளங்கையில் பொறிக்கப்பட்டுள்ளது ஒரு ஆச்சரியமான ஒற்றுமை.

7) 1930களில் ஐரோப்பாவில் பாசிஸமும், நாசிஸமும் தலை தூக்க, தொழிற்புரட்சியால் எழுந்த பெரும் நிறுவனங்களினாலும், மிகக் குறிப்பாக சர்வதேச வங்கிகளினாலும் பாதிக்கப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்ட மத்தியதர சிறு வியாபாரிகள், மற்றும் தொழில் அதிபர்களின் உதவியும் காரணமாகும். இதன் விளைவாக ஆறு மில்லியன் யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

8) இந்துத்துவத்துக்கு கிடைத்துவரும் ஆதரவானது ஒருங்கிணைந்து வரும் ஒருவகை பொருளாதார சக்திகளின் பிரதிபலிப்பு ஆகும்.

9) அந்த பொருளாதாரச் சக்திகள் பா.ஜ.க. வை தன் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளத் தேர்ந்தெடுத்திருப்பதுதான், "தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் நாம் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது" என்ற வாக்கியத்துக்கு அர்த்தமாகும்.

10) அந்த பொருளாதார சக்திகள் கடந்த 40 வருடங்களாக பெரும்பாலும், இந்திய தொழில் லைசன்ஸ் மற்றும் கடனுதவி வழங்குதல்கள் மூலம் இந்திய மத்திய அரசாங்க அரசியல்வாதிகளாலும், அதிகார வர்க்கத்தாலும் (Bureaucrats) சலுகைகள் அளிக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர்கள். இவர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள எடுக்கும் முயற்சியின் வெளிப்பாடானது, பா.ஜ.க.யின் கொள்கைகள் மீதுள்ள கரிசனமாக உருவெடுத்துள்ளது.

(பா.ஜ.க. க்கு படித்துப் பட்டம் பெற்று, அரைகுறை வேலை வாய்ப்புகளில் அமர்ந்திருக்கும் இளைஞர்களிடம் அதிகமான ஆதரவு காணப்படுகிறது. கணிதம் மற்றும் அறிவியல் படித்து வெளிநாடுகளில் மத்தியதர வேலைவாய்ப்புகளில் அமர்ந்திருப்பவர்களிடமும் சிறிது ஆதரவு காணப்படுகின்றது)

விவசாய மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் தங்கியிருக்கும் இந்திய இளைஞர்களிடம் பா.ஜ.க.க்கு அதிகம் ஆதரவு இல்லை.

11) அந்த பொருளாதார சக்திகள் "தாராள சந்தை (Free Market), இந்துத்துவம்" என்பதின் அடிப்படையில் இந்தியாவை "பொருளாதார விபசாரத்தில்" ஈடுபடுத்துவதன் மூலம் அந்நியச் செலவாணிச் சட்டங்கள், தொழிற் சட்டங்கள் போன்றவற்றை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தத் துடிப்பவை.

12) இவை அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஐரோப்பிய கூட்டு நாடுகள் ஆகியவற்றிற்கு இடையேயான பொருளாதாரப் போட்டிகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைப்பவை. அப்போது ஏனைய சிறிய அண்டை நாடுகளின் நலிவுகளைத் தன் சுய நலத்திற்காகப் பயன்படுத்தவும் தயங்காது.

13) இந்தப் பொருளாதார சக்திகள் தங்களுடைய உற்பத்திகளின் சந்தைக்கு கிழக்காசிய நாடுகளையும், சில ஆபிரிக்க நாடுகளையும் நம்பியிருக்கின்றன. "இச்சந்தை"யை பாதுகாக்க இந்திய இராணுவத்தை பயன்படுத்தவும் இவர்கள் தயங்க மாட்டார்கள். தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவை இந்தப் பொருளாதாரச் சக்திகள். இந்தப் பொருளாதார சக்திகளுக்கு எதிரானது இவைகளுடன் கூட்டு சேர விரும்பாத பல்தேசிய நிறுவனங்களும் (ஒருசில), சர்வதேச வங்கிகளும். இதில் யாரை ஆதரிப்பது, யாரை எதிர்ப்பது என்பது அவரவர்களுடைய சூழ்நிலையைப் பொறுத்தது.


இதற்கான தீர்வு, தமிழ் தேசியத்திற்கு எதிரான பொருளாதார சக்திகளின் கையில் இந்திய அரசியல் அதிகாரம் சிக்காமல் தடுப்பதேயாகும்.

**கோ. வி. மோகன்**
**கவிடன்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எங்கும் ஆண் மேலாதிக்கம்



பாலகுமாரன்

எங்கும் ஒரே கதைதான். மேற்காயிருந்தால் என்ன? கிழக்காயிருந்தாலென்ன? பெண்களைக் கீழ்நிலைப்படுத்தல் என்பது பொதுவானது. குறிப்பாக மெத்த வளர்ந்த மேற்கிலோ பலருக்கு பெண்நிலைவாதம், பெண்ணுரிமை என்றாலே ஒவ்வாமை. பெண்ணுரிமை இயக்கங்கள் விரைவிலேயே தமது முடிவை அடைந்துவிடும் என எதிர்வுகூறல் இவர்கட்கு விருப்பமான ஒரு செய்தி. ஆனால், இவர்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக இன்று பெண்ணுரிமை இயக்கங்கள் புதியதொரு திசையில், மிக முனைப்பாக செயலாற்றி வருகின்றன.

அறிவியல் ரீதியாக கடந்தகாலசெயற்பாடுகட்கு ஊடாக, குறிப்பாக பெண்களுக்கான பத்தாண்டு (1975-1985) காலகட்ட பட்டறிவின் விளைவாக பெண்ணுரிமை அமைப்புக்கள் சில உண்மைகளை மிகத் தெளிவாக உணர்ந்துவிட்டன. எங்கும் ஆண் மேலாதிக்கம் நிலவும் இவ்வுலகிலே இதுவரை காலமும் பெண்ணின அமைப்புக்கள் எடுத்த முயற்சிகள் முழுமை பெற முடியவில்லை. அரசியல், சட்ட, ஏன் சமயத்துறையை எடுத்தால்கூட, எங்கும் பெண்ணுரிமை என்பது ஒரு முக்கிய விடயமாக மதிக்கப்படுவதே இல்லை. மிகக் குறுகிய வட்டத்துக்குள்ளே பெண்ணுரிமைகளை அடக்கிவிட ஐ.நா. உட்பட, ஆணாதிக்க உலகம் முயல்கின்றது. அத்தோடு, பெண்கள் முகங்கொடுக்கும் வன்முறைகள், அடக்குமுறைகள், பாரபட்சம் காட்டப்படல் போன்ற கொடுமைகள் உலகெங்கும் அதன் அளவிலும், தன்மையிலும் வேறுபட்டாலும், அடிப்படையில் ஒன்றே என்பதையும் இவர்கள் இன்று மிகத் தெளிவாக உணர்ந்துவிட்டனர்.

ஆசியாவிலே பெண்ணுரிமை அமைப்புக்கள் பெண்கள் விலைபேசப்படும் அடிமை நிலைக்கு எதிராகப் போராடவும், ஆபிரிக்காவிலோ பழமைவாத தேசவழமைக் கோட்பாடுகள் பூட்டிய விலங்குகளிலிருந்து பெண்களை மீட்கவும் முன்னுரிமை வழங்க நேரிடுகிறது. அதுபோலவே மேற்கில் பெண்கட்கு எதிரான உள்ளக வன்முறைகட்கு எதிராகப் போராட வேண்டும். இவ்வாறு பலவகை முன்னுரிமைகள் இருந்தாலும், அடிப்படையிலே பெண்கள் கீழ்நி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


லைப்படுத்தல் என்பதே ஒரு சர்வதேச பரிமாணமாக உள்ளது. பெண்ணுரிமைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவரும் 'றொபேக்கா குக்' என்ற சர்வதேச சட்டத்துறைப் பேராசிரியையின் முடிவு இது. எனவே தான் இன்று பெண்ணுரிமை அமைப்புக்கள் சர்வதேச அரங்குகளில் சட்டரீதியான மனித உரிமைகளின் மையமாக அங்கீகரிக்கப்பட்ட உலக அறங்களாக பெண்ணுரிமைகளை ஆக்க முனைப்பாக முயலுகின்றன.

இன்றுள்ள பெருத்த அவலம் என்னவென்றால், மனித உரிமைகளின் காப்பிடமாகக் கருதப்படும் ஐ.நா.விலே நிலவும் மோசமான ஆண் மேலாதிக்கம் தான். ஐ.நா.வின் முழுக் கவனமும் ஆணுலகம் முகங்கொடுக்கும் அரசியல், குடியியல்சார் மனித உரிமை மீறல்கள் குறித்தே செலுத்தப்படுவதாக பெண்ணுரிமை அமைப்புக்கள் குறைப்படுகின்றன. பெண்கட்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகள் குறித்தோ அல்லது அவ்வவ் நாட்டு சமய ரீதியான புறக்கணிப்பு விதிகள், தேசவழமையின் அநீதியான பக்கங்கள் குறித்தோ ஐ.நா. போதிய கவனம் செலுத்தவில்லை. ஏனென்றால், ஐ.நா. ஆணுலகத்தால் தாபிக்கப்பட்டு, அவர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது என்கிறார் றொபேக்கா. ஐ.நா.வின் பல மனிதவுரிமைப் பட்டயங்கள், காப்பு விதிகள், கண்காணிப்பு ஏற்பாடுகள் யாவும் பெண்ணுரிமைகளையும் அடக்கியுள்ளதாக கூறப்படுவது பொய்மை என்கிறார் இப்பேராசிரியை. ஐ.நா.வின் சித்திரவதைக்கெதிரான கண்காணிப்புக்குழு பெண்களுக்கு எதிரான வதைகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதையும், பெண்கள் படும் வதைகள் இவர்கள் கூறும் சித்திரவதைக்கான வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படாமல் இருப்பதையும் இங்கு குறிப்பிட முடியும்.

இது போலவே, 1948ம் ஆண்டு தாபிக்கப்பட்ட ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவும், முதலில், இதன் துணை அமைப்பாக விருந்து பின் முழு ஆணைக்குழுவாக மாற்றப்பட்ட பெண்கள் நிலை குறித்ததான ஆணைக்குழுவும் (Commission on the Status of Women) தனித்தனி செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை கொண்டிருந்தாலும், பெண்ணுரிமைகளை மனித உரிமைகளாக்கும் விடயத்தில் போதிய பங்காற்ற முடியவில்லை. ஏனென்றால், இவை இரண்டிற்குமிடையே போதிய தொடர்போ, ஒத்துழைப்போ இல்லாமையால் இந்நிலை ஏற்பட்டதாக பெண்கள் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதற்கும் மேலாதிக்கமே காரணம்.


எனவேதான், தனது பொதுமைப்பட்ட பெண்ணுரிமை விவகாரத்தை சர்வதேச மயப்படுத்த இவை முயல்கின்றன. முதற்படியாக இவ்வருடம் வியன்னாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச மனித உரிமை மாநாட்டிலும் அதைத் தொடர்ந்து, 1994ல் நடைபெறவிருக்கும் சனத்தொகையும், அபிவிருத்தியும் தொடர்பான சர்வதேச மாநாட்டிலும் நிகழ்ச்சி நிரல்களில் பெண்ணுரிமையை மனித உரிமையாக்கும் விடயத்தை சேர்க்க முயல்கின்றனர். இதைத் தொடர்ந்து இவர்கள் அடுத்தபடியாக சீனாவில் 1995ல் நடைபெறவிருக்கும் பெண்கட்கான நான்காவது சர்வதேச மாநாட்டில் இது குறித்து ஒரு தெளிவான முடிவை எடுக்க முடியும் என நம்புகின்றனர்.

பெண்கள் தமக்காக தாமே செய்ய முற்பட்டிருக்கும் இப்பணி வெற்றியடைய வேண்டும், எனினும், சட்டரீதியாக மட்டும் பெண்கள் பெறும் சமத்துவம் ஆணுலகத்தால், அவர்களது மனோவுலகத்தாலும் வழங்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முதற்படியாக றொபேக்கா குக் கூறியதுபோல், "மனித உரிமைகள் என்பது சர்வதேச சட்ட அமைப்பின் தலையாய துறையாக விளங்க வேண்டுமானால், மானிட சமுதாயத்தின் அரைப்பங்கின் உரிமைகள் பேணப்பட வேண்டும்; தீவிரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மறுபாதி ஆணுலகம் உணர வேண்டும்." ■■

**வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள், அனுபவித்துவரும் பொருளாதார இன்னல்களிலிருந்து முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. சமூக மேம்பாட்டுத் திட்டமாக ஆடுவளர்ப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி, அதன்மூலம் 50க்கு மேற்பட்ட குடும்பங்களை பயனடைய வைத்துள்ளது. இத்திட்டமானது, கிளிநொச்சி தெற்கு செல்வா நகர் கிராமத்திலும், கிளிநொச்சி மேற்கில் ஊற்றுப்புலம், எள்ளுக்காடு ஆகிய கிராமியங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



விமானத் தாக்குதலில் இருந்து தமது நடமாட்டத்தையும் தாம் பயன்படுத்தும் வாகனத்தையும் எதிரி எளிதில் கண்டு விடாத முறையில் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்க ளைக் கொண்டு தமது வாகனத்தை உருமறைப்புச் செய்துள்ளார்கள்.

## இயற்கையோடு இயைந்திருக்கும் உயிரினங்கள்

# உருமறைப்பு





உயிரினங்கள், ஆபத்தை விளைவிக்கும் எதிரி விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக உருமறைப்புச் செய்துகொள்கின்றன. பச்சோந்தி என அழைக்கப்படும் ஒருவகை இன ஓணான், தென்னையைத் தாக்கும் கருவண்டு, இலைப்பூச்சிகள் போன்ற உயிரினங் களை இதற்கு உதாரணங்களாகச் சொல்லலாம். இக் கருவை அடியொற்றியே உருமறைப்பு மேற்கொள்ளப்பட் டது. உருமறைப்பானது இயற்கையாகவும் செயற்கையாக வும் செய்து கொள்ளப்படுகின்றது. உருமறைப்பின்போது ஒளிரும் பொருட்கள் தவிர்க்கப்படுகின்றன. உலோக நாடாக்களைக் கொண்ட கடிகாரங்கள் அணிவது விரும் பப்படுவதில்லை. இரவுவேளையில் தாக்குதலுக்காக நக ரும்போதும் அல்லது வேறு நோக்குடனான நகர்வின் போதும் வெள்ளை நிறமான ஆடை அணிவதில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஏனென்றால் அது ஆள்நட மாட்டத்தைத் துல்லியமாக இனம் காட்டிவிடும். பலம் பொருந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக போராடும் ஒரு கெரில்லா வீரன் உருமறைப்புச் செய்துகொண்டு மறைந்திருந்து எதிரி எதிர்பாராத வகையில் தாக்கி அழிக்கிறான். மேலும் ஆகாய விமானத் தாக்குதல்களில் இருந்து போராளிகள் தமது வாகனங்களையும், தமது நிலைகளையும் காத்துக் கொள்வதற்கும் உருமறைப்புச் செய்து கொள்வார்கள்.

எதிரியின் நிலைகளைத் தாக்கும்போது அப்பிரதேசத்தின் இயற்கைச் சூழலோடு ஒத்திருந்து அவனது நிலைகளை நோக்கி நகர்வை மேற்கொள்வதற்கும் உருமறைப்புப் பயன்படும்.

சூழலில் இருந்து தரம் பிரித்து அறிய முடியாத வகையில் சூழலோடு ஒத்திருத்தலே உருமறைப்பின் சிறப்பாகும். ■



இயற்கையோடு ஒத்து நின்று எதிரி காணமுடியாதவாறு நிலை எடுத்திருந்து சண்டைபுரியும் புலிவீரர்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!**

எரிமலையின் ஒவ்வோர் குமுறல்களையும் தவறாது பருகிவருபவர்களில் நானும் ஒருவன்.


கலை, கலாச்சார இதழாக மட்டும் இல்லாமல், தாயக விடுதலை உணர்வுகளை விதைத்தும், விடுதலை உணர்வு ஏற்கனவே வேரோடிய உள்ளங்களில் உரமாகவும், தமிழீழம் நீங்கி வந்தோருக்கு உண்மையான சுதந்திரத்தை எடுத்துரைக்கும் வழிகாட்டியாகவும், திங்கள் தோறும் எரிமலை மிளிர்வது ஆயிரமாயிரம் பாராட்டிற்கு உரியது. ஆயிரமாயிரம் மைல்கள் தாண்டி வந்திடினும், நாளை நமக்கு ஆதரவுக் கரங்கள் நீட்டி அழைப்பது நம் தாயகம் மட்டுமே. என்பதை உணர்ந்தும் எரிமலையின் ஒவ்வோர் பக்கங்களும், சுதந்திரத்தை நோக்கி நாம் செல்லும் மைல்கற்களே!

**S. சாந்தன்**
**சுவீடன்.**

**அன்புடன் ஆசிரியருக்கு!**

எரிமலை என்ற இதழை தவறாது படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன் ஆனி மாத இதழ் பார்த்தேன். கப்டன் மொறிஸ், எங்கள் தேசத்து மாவீரன், கண்ணீரில் மூழ்கும் ஓடங்கள் என்னும் கிட்டண்ணாவைப் பற்றி எழுதிய கவிதை அருமையாக இருந்தது. எரிமலையை எனது மனமார வாழ்த்துகிறேன்.

**ம. றெஜினோல்ட்**
**பாரிஸ்.**




**எரிமலை ஆசிரியர் குழுவுக்கு!**

எரிமலை இதழில் பெருமை சேர்க்கும் வகையில் எழில்மிக்க புகைப்படங்களை வெளியிட்டு வருகிறீர்கள். இன்னும் வளர என்றும் என் நல்லாதரவு.

**M.R. டேவிட், பாரிஸ்.**

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

என்னை தங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. ஆயினும் தங்களுடன் தொடர்பு கொள்வதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன். உண்மை. தமிழர்களை அடையாளங்காட்டும் பணியில் ஈடுபட்டு, இனமீட்புக்கு போராடும் உங்களோடு எங்கள் உறவை வலுப்படுத்திக் கொள்ள எண்ணுகிறேன்.

**குமார், தமிழ்நாடு.**

**ஆசிரியர் குழுவிற்கு;**

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ இளைஞர்களின் ஏடாக எரிமலை திகழ்கிறது. மண்மணம் கமளும் இந்த எழுத்துக்கள் எங்களை ஒருமித்த ஒரு உன்னத உணர்வுக்குள் அழைத்துச் செல்கிறது.

மாதாமாதம் தொடர்ந்து எரிமலை வெளிவருவதால் ஈழத்தின் நடப்பியல்புகளை காலம் தாழ்த்தாது அறிந்து கொள்ளும் பெரும் பயன் நமக்குக் கிடைத்துள்ளதை மறுக்க முடியாது. இங்கு எத்தனையோ பத்திரிகைகள் வெளிவந்த போதும், எரிமலையின் தனித்த சிறப்புக்குள் ஏராளமானவை.

தொடர்க உங்கள் பணி

**நன்றியுடன் கிருபா**
**டென்மார்க்**

**அன்புடன்!**

அருமையான எரிமலை வாசகர்களே, உங்கள் சிலரிடமிருந்தே சென்ற எரிமலை இதழ் பற்றிய கருத்துக்களை கடிதமூலமும் நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அறிந்தோம்.

உங்களிடமிருந்து ஏற்கனவே சிறுகதைகள், ஓவியங்கள், கட்டுரைகள், கவிதைகள், புலம்பெயர்ந்த எமது வாழ்வியல் எதார்த்தத்தை படம்பிடித்துக் காட்டும் இலக்கியங்களை பதிவாக்குவதற்காக கேட்டிருந்தோம். அது குறித்து எரிமலையின் அனைத்து அக்கறைமிக்க வாசகர்களையும் கருத்தில் கொள்ளுமாறு அன்புடன் கேட்கின்றோம். மேலும், உங்களிடமிருந்து எரிமலை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், கருத்துக்களையும் வேண்டுகின்றோம்.

**- ஆசிரியர் குழு -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உலக



# மனித உரிமைகள் மாநாடு

## ஒரு நேரடி அனுபவம்

**திரு. லோறன்ஸ் திலகர்**

உலக மனித உரிமைகள் மாநாடு, அவுஸ்திரிய தலைநகரான வியன்னாவில் இவ்வருடம் யூன் மாதம் 14ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை நடைபெற்றது. 1968ம் ஆண்டு, ஈரானின் தலைநகரான ரெகிரானில் நடைபெற்ற பின்னர், 25வது ஆண்டில் இரண்டாம் மாநாடு இடம்பெற்றுள்ளது. இம்மாநாட்டை நடத்துவதற்கான ஆயத்தங்கள் பல வருடங்களாக நடைபெற்றன. 1990ம் ஆண்டு, 45/155ம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம், ஐ.நா.சபை இத்தகு மாநாடு ஒன்றை நடத்துவது எனத் தீர்மானித்தது. பின்னர், 1992 டிசம்பரில், மாநாட்டை என்ன ஒழுங்கில் நடாத்துவதென்ற திட்டத்தீர்மானம் ஐ.நா.சபையின் பொதுச்சபையில் நிறைவேறியது. அதே வேளை, பிராந்திய ரீதியான ஆயத்தக்கூட்டங்களும் நடந்தன. ஆபிரிக்கப் பிராந்தியக் கூட்டம் ரியூனிசிலும், தென்னமெரிக்கக் கூட்டம் கோஸ்ராரிக்காவிலும், ஐரோப்பியக் கூட்டம் பிரான்சிலும், ஆசியக்கூட்டம் தாய்லாந்திலும் நடந்தன. "மனித உரிமைகளை வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலும் ஐ.நா.சபை புரிந்துவரும் செயல்பாட்டை அளவிடுதலும், இவ்விடயத்தில் ஐ.நா.சபையின் செயல்பாட்டைத் தாக்கமுள்ளதாக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதுமே உலக மனித உரிமைகள் மாநாட்டின் நோக்கம் என வரையறுக்கப்பட்டது. இம்மாநாட்டைக் கூட்டுவதற்கான தேவை, சுதேசிய மக்களின் உரிமைகள் (The rights of the Indigenous peoples) பெண்கள் உரிமைகள், குழந்தைகளின் உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் எழுந்தது என்று கூறிய போதிலும், தேசிய சுயநிர்ணய உரிமையை வரையறுக்கும் அவசியத்தினால் ஏற்பட்டது என்பதே உண்மையாகும். 21ம் நூற்றாண்டினுள் காலடி எடுத்து வைக்கும் இக்காலகட்டத்தில், புதிய அரசுகளின் தோற்றத்தைக் கட்டுப்படுத்துவதும், ஒழுங்குபடுத்துவதும், தடுத்தலும் அவசியமாகுமென மாநாட்டை ஒழுங்கு செய்தோர் கருதியதாகவே தோன்றியது. தேசிய இனங்கள், தங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட அரசினுள்ளே புதிய அரசுகளை தோற்றுவிக்கும் செயல்பாடானது ஏராளம் அரசுகளை தோற்றுவிக்கும் எனவும்,இந்நிலைமையானது, உலக சமாதானத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் குந்தகமானது எனவும், ஆகவே, சில வரையறைகளை வகுக்க வேண்டும் என மாநாட்டை நடத்தியோரின் விழைவே இந்த மாநாடு. ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்ட அரசுகளை அங்கத்தினராகக் கொண்ட ஐ.நா.சபை இத்தகு தீர்மானத்தை எடுத்து, அதை மாநாட்டு வடிவில் நடைமுறைப்படுத்த முயன்றதில் ஆச்சரியமில்லை. காரணம், ஏற்கனவே நிலைபெற்றுள்ள அரசுகள் எவையும், தம்மிடையே புதிய அரசுகள் உருவாகுவதையோ, தமது இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பாதிக்கப்படுவதையோ விரும்புவதில்லை. எனவே, புதிய அரசுகளின் தோற்றம், இத்தடைகளை உடைத்துக் கொண்டு தீவிரமாக இடம் பெற்றுவரும் காரணத்தினால், இதனைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என ஐ.நா.சபை தீர்மானித்ததில் புதுமையில்லை. எனவே, இதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய பரிந்துரைகளை மேற்கொள்வதற்குக் கூட்டப்பட்ட இம்மாநாடானது, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உரிய முக்கியத்துவத்தைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





மாநாட்டில் கலந்துகொண்ட திரு. லோரன்ஸ் திலகர்

கொடுக்காததும் பொருத்தமாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் புங்கு இம்மாநாட்டில் பெரும் வரையறைக்குட் படுத்தப்பட்டிருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்கள் குட்டையை குழப்பி விடலாம் என்ற பயம் இருந்திருக்கலாம். எனவே, மாநாட்டுத் தீர்மானத்தை வகுக்கும் குழுவில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அறிக்கைகள், மாநாட்டுச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டன. மேலும் ஏற்கனவே, அனுமதிக்கப்பட்ட பல பிராந்திய அரச நிறுவனங்களுக்குப் பின்னர் அனுமதி மறுக்கப்பட்டன. அரச எதிர்ப்பால், தலாய்லாமா போன்ற முக்கிய தலைவர்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் பங்கு பற்ற அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில், ஒரு தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு விடுதலை இயக்கத்தின் பிரதிநிதி என்ற முறையில், எமது பங்கேற்பு கயிற்றின் மேல் நடப்பதற்கு ஒப்பாகவே இருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு சில மட்டுப்படுத்தப்பட்ட சலுகைகளைப் பெருமளவு பயன்படுத்தலே எமது செயல்ப்பாடாக இருந்தது.

மாநாடு, சர்வதேச வியன்னா மையம் என்ற மண்டபத்தில் நடந்தது. 6000க்கு மேற்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மண்டப வாயிலுக்கு வெளியிலே, கூர்த்து மக்கள், சீக்கியர் ஒவ்வொரு நாளும் கூடிநின்று சுலோகங்கள் எழுப்பி, தங்கள் பிரச்சினைகளைத் தெரியப்படுத்தினர். கூர்த்து மக்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி தமது தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரினர். துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து, தமிழீழ மக்களின் போராட்டத்தையும், சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களையும் வெளிப்படுத்துவதில், தமிழீழப் பிரதிநிதிகளின் பங்கு கணிசமாக வெளிப்பட்டது. இவ்விடயத்தில் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் என்ற அமைப்பின் செயல்ப்பாடு மிகுந்த தாக்கத்தைக் கொடுத்தது. அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் திரு. கிருபாகரனை பிரச்சார வேலைகளிலும், கலந்துரையாடல்களிலும் காணக் கூடியதாக இருந்தது. அவ்வமைப்பு நடத்திய கண்காட்சி,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மைப்பு நடத்திய கண்காட்சி, பல்லாயிரக்கணக்கானோரைக் கவர்ந்தது. தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை என்ற தலைப்பில் சிறிலங்காவின் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் பிரசுரங்கள், நூல்கள், படங்கள் என்ற வடிவத்தில் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கோரமான மனிதப்படுகொலைப் படங்களைக் கண்டு பலர் கண்ணீர் வடித்ததாக, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஒரு மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையானது, ஏனைய சகல உரிமைகளுக்கு அடிப்படையாகவும், ஊற்றாகவும் இருப்பதாகவும், எனவே, உலக சமாதானத்துக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம் அவசியம் எனவும் கூறியது. தென்கிழக்காசிய நாடுகளின் கருத்தரங்கொன்றில் திரு. கிருபாகரன், தமிழ் மக்களுக்கெதிரான பொருளாதாரத்தடை என்ற பொருளின் அடிப்படையில், சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களை புள்ளி விபரங்களுடன் எடுத்துக் கூறினார். கண்காட்சியின் தாக்கம், சிறிலங்கா அரச பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் அமரதுங்காவைக் கண்காட்சிக்கு வரவைத்தது. அவுஸ்திரிய தொலைக்காட்சி நிருபர், கண்காட்சியைச் சுட்டிக் காட்டி, மனிதப் படுகொலை பற்றிக் கேள்வி கேட்ட போது, அமைச்சர் அமரதுங்கா அதனை ஒத்துக்கொள்ள நேர்ந்தது. ஆயினும், நிலைமை முன்னேறுவதாகத் தெரிவித்தார்.

திரு அன்ரன் பொன்ராஜா, சர்வதேச கல்வி நிறுவனத்தின் சார்பில் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் மாநாட்டில் வாசித்த அறிக்கை, சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்தை மறுப்பதாக இருந்தது. அமைச்சர் அமரதுங்கா வாசித்த அறிக்கையில், ஒரேயொரு பயங்கரவாதக் குழு தனி இன அரசொன்றை உருவாக்க முயல்வதாக தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலிறுத்த அன்ரன் பொன்ராஜா, சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டம், சர்வதேச சட்டவரையறைக்குள்ளும், ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்குள்ளும் அடங்குவதோடு, சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பினாலும் நியாயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சுயநிர்ணய உரிமையைக் கோரும் "மக்கள்"

**சிறிலங்கா அரசால் நடத்தப்பட்ட இனப்படுகொலையை வெளிப்படுத்தும் கண்காட்சி**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



செஞ்சோலைச் செல்வங்கள் சிரிக்க வழிசெய்வோம் !

நமது தாயகத்தின் போர்ச்சூழலில் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் காப்பகமான "செஞ்சோலை" அமைப்பிற்கு உதவுமுகமாக தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளை நடாத்தும். . .

செஞ்சோலைக் கலைமாலை

- பிரான்ஸ் நாட்டில் பலதடவைகள் மேடையேறி பாராட்டுக்களைப்பெற்ற நாடகம்!
- தமிழர் கலைபண்பாட்டுக்கழக பிரான்ஸ்க்கிளையின் உன்னதப் படைப்பு !
- ஜேர்மனியில் முதல் தடவையாக மேடையேறும் புரட்சிக் கலை வெளிப்பாடு !

14.08.93 ஒளவையார் 17:00மணி

புதியதளம் புதிய பார்வை புதிய சிந்தனை

மொட்டவிழ்ந்து இதழ்விரித்து சிரிக்கின்ற நேரத்தில்
பெற்றோரை இழந்துவிட்ட இளந்தளிர்களின் இதயத்தைத் தாலாட்ட
தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஜேர்மன்கிளையின்
தமிழீழம் இசைக்குழு வழங்கும் மெல்லிசை நிகழ்ச்சி.

தளிர் இசைத்தாலாட்டு

இடம்: Stadthalle, Oberhausen காலம்: 14.08.93 நேரம்: 17:00 மணி

இதயத்தில் ஈரம் உள்ளவர் அனைவரும், இருகரம் நீட்டி ஆதரவளிப்பீர்.
அனைத்து தமிழ் நெஞ்சங்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

கலைபண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
ஜேர்மன் கிளை.

"புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்"

என்பதற்கு வரைவிலக்கணம், ஐ.நா. சபையின் விசேஷ விசாரனையாளர்களால் தனி இனக்கூட்டு என்றே வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். உலக சமாதான அமைப்பின் சார்பில் கலந்து கொண்ட செல்வி மான், தென்கிழக்காசிய நாடுகளின் கருத்தரங்கில் கிட்டுவின் மரணம் குறித்த கவிதை ஒன்றை வாசித்தார். உலக சமாதான அமைப்பின் முன்னெடுப்பில், 100க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களால் கைச்சாத்திடப்பட்ட கூட்டு அறிக்கையானது, இலங்கைத் தீவானது இரு அரசுகளாகப் பிரிபடப்போவது நெருங்கி வருவதாக எச்சரித்ததோடு, சிறிலங்கா அரசாங்கத்தை, பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரி, இனப்பிரச்சினையை, மனித உரிமைகளினதும், சுயநிர்ணய உரிமையினதும் அடிப்படையில் தீர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

அமெரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணி திருமதி கரன் பாக்கரின் தலைமையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று, மாநாட்டு மண்டபத்தினுள் நடைபெற்றது. கரன் பாக்கர், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான சட்ட வலுவையும், கோரிக்கை வளர்ந்த வரலாற்றுத் தொடர்ச்சியையும் எடுத்துக் கூறி, தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ் மக்கள் இன்னும் எவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். இம்மாநாட்டில் நான் பேசும்போது, கடந்த 45 வருட கால, தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை, இன்படுகொலை என்ற வடிவத்தை அடைந்து, வளர்ச்சி பெற்று வருகிறதே ஒழியக் குறையவில்லை என்றும், தமிழீழத் தேசியம் நிலைபெற்றுவிட்டது என்றும் அது முன்னேறியே செல்லும் என்றும் தெரிவித்தேன். இவ்வரலாற்றுப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற ரீதியில், வரலாறு மீண்டும் மீண்டும் அரங்கேறியபோதும், அது பின்நோக்கி நகர்வதில்லை என்ற கருத்தையும் முன்வைத்தேன்.

மனித உரிமை மாநாட்டில், மனித உரிமையின் சர்வதேசியத் தன்மை வலியுறுத்தப்பட்டது. இவ்விடயத்தில் உலகம் மேற்குக் கிழக்காகப் பிரிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மேற்குநாடுகளின் கருத்துக்கு மாறாக, சீனா, மலேசியா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போன்ற நாடுகள், சர்வதேசியத் தன்மை, தங்கள் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்ற கருத்தை முன்வைத்து நிராகரிக்க முற்பட்டன. ஒவ்வொரு நாட்டினதும் கலாச்சார, பொருளாதார, வரலாற்று நிலமைகளுக்கு ஏற்பவே மனித உரிமை அனுட்டிப்பு கையாளப்பட வேண்டும் என்பது இவற்றின் வாதமாகும். ஆயினும், மனித உரிமையானது, சர்வதேச சமூகத்தின் கரிசனைக்கு உட்பட்டதென்றும், நாட்டின் எல்லைகளைக் கடந்ததென்றும், எனவே, "மனித உரிமைகளின் சர்வதேசியத் தன்மை சாஸ்வதமானது" என்பதுமான மேற்குலகின் கருத்தே எடுபட்டு, மாநாட்டு இறுதி அறிக்கையிலும் பிரகடனப்படுத்தப்பட்டது.

மேலும், பெண்கள் உரிமைகளுக்கும் அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்கள் உரிமை குறித்துப் பேசிய ஒரு பிரதிநிதி, ஒடுக்கப்பட்ட, கொல்லப்பட்ட பெண்களை நினைவு கூருமுகமாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்று ஆணித்தரமாக முன்வைத்தபோது, மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் எழுந்து மௌன அஞ்சலி செலுத்த முற்பட்டனர். நிகழ்ச்சி நிரலில் இல்லாத இத்திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முனைந்த மாநாட்டுத் தலைவர், அப் பெண்விடுதலைவாதப் பிரதிநிதியின் அறைகூவலைக் கோரிக்கையாக ஏற்று, அதற்கு அனுமதிப்பதாகத் தெரிவித்து, அவையின் மௌன அஞ்சலியை ஒழுங்கமைத்தார்.

மியன்மார் நாட்டுப் பிரதிநிதி பேச எழுந்தபோது, அதன் எதிர்ப்பாளர் புதுவித எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றைச் செய்தார்கள். ஜனநாயக ரீதியாக அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இராணுவ ஆட்சியால் சிறை வைக்கப்பட்டிருக்கும் நோபல் சமாதானப் பரிசுபெற்ற பெண்மணி அவ்சாங் சுங் ஹீயின் முகமூடியை நூற்றுக் கணக்கில் வினியோகித்து, அணியுமாறு செய்தார். நூற்றுக்கணக்கான அவ்சங் சுங் ஹீக்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தனர். மியன்மார் பிரதிநிதியின் மனித உரிமை தொடர்பான பேச்சினைக் கண்டிப்பது போல் அவ்வெதிர்ப்பு நடவடிக்கை அமைந்திருந்தது.

சுதேசிய மக்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினையும் மாநாட்டில் பெரிதாகக் கதைக்கப்பட்டது. கடந்த வருடம் சமாதான நோபல் பரிசு பெற்ற, குவாத்மாலா நாட்டு

**பிரேமதாசவின் பயங்கர ஆட்சியின் உச்சக்கட்டம் நிலவிய காலம்.**

## 60000 சிங்களமக்கள் கொல்லப்பட்ட நேரம்.

டாக்டர் மனோகரி சரவணமுத்து அவர்களின் புதல்வன் றிச்சட் டீ சொய்சா ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் பத்திரிகை நிருபராகக் கடமை புரிந்து வந்தார். இக்காலத்தில் இவரின் நடவடிக்கைகளை அவதானித்த பிரேமதாஸாவின் கொலைப் படையினர், இவர் பற்றிய தகவல்களை பிரேமதாஸாவுக்குச் சேகரித்து வந்தனர். இவர் ஜே.வி.பி. யுடன் தொடர்புடையவர் என்ற ஊகம் வலுப்பட, அவரை கொலை செய்துவிட கொலைக்குழு ஒன்றின் பொறுப்பாளரான பொலிஸ் அதிகாரி குணசிங்காவின் தலைமையில் றிச்சட் டீ சொய்சா அவரது கொழும்பு வீட்டிலிருந்து கடத்தப்பட்டார். அவரது சிதைக்கப்பட்ட உடல் மறுநாள் கொழும்பு கடற்கரையில் காணப்பட்டது. தனது பிள்ளையைப் பிரிந்து, பெரும் துயருக்கு ஆளான மனோகரி சரவணமுத்து, நீதி கேட்டு, நீதிமன்றத்தில் வழக்காடத் துணிந்தார். மனோகரி சரவணமுத்து, கடத்திய பொலிஸ் அதிகாரியை அடையாளங் காட்டியபோதும், அவருக்கு நீதி மறுக்கப்பட்டது. வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் சர்வதேச நீதிமன்றத்திலும் நீதி கேட்க எடுத்த முயற்சிகளும் தோல்வி கண்டன. அதேவேளை கொலையாளி, என உறுதிப்பட்ட அப்பொலிஸ் அதிகாரியை, சர்வதேச அபிப்பிராயத்தை துச்சமென மதித்த பிரேமதாஸா, தன் மெய்ப்பாதுகாவலருள் ஒருவராக நியமித்தார். அந்தத் திமிரில் அப்பொலிஸ் அதிகாரி, திருமதி மனோகரி சரவணமுத்து தன்மீது வீண்பழி சுமத்தியதாக மானநஷ்ட வழக்கும் செய்தார். ஆமர் வீதியில் மனோகரியின் மகனைக் கொலை செய்ய முழுமுதற் காரணமாயிருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவும், கொலையை நிறைவேற்றியவருமான குணரட்ணாவும் அடையாளம் காணப்படாது அழிந்தொழிந்து போயினர். நீதிக்கும், நேர்மைக்கும், சத்தியத்துக்கும் கிடைத்த வெற்றியாக அந்தத் தாய் திருப்தியுற்றிருப்பாள் என்பது வாஸ்த்தவமே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றது. மண்டபத்துக்கு வெளியே அமெரிக்க அஸ்ரெக், அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகள் போன்றோரின் நடனங்கள் அட்டகாசமாக இடம்பெற்றன. ஆயினும், மாநாட்டு இறுதி அறிக்கையில், சுதேசிய மக்களின் சுயநிர்ணய உரிமை வரையறுக்கப்படாது தவிர்க்கப்பட்டது ஏமாற்றத்தை அளித்தது.

பொஸ்னியா ஹெஸிகோவினா நாட்டு வெளிவிவகார அமைச்சரின் உருக்கமான உரை இடம்பெற்றது. சர்வதேச சமூகத்தின் இரட்டை வேடத்தை அவர் சாடினார். சிலநூறு மைல் நீள தூரத்தில் ஓர் இனப்படுகொலை நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி, அதை நிறுத்த முடியாமல் ஒரு மாநாடு நடைபெறுவதை ஆணித்தரமாகக் கூறி, அவ்வினப்படுகொலையை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தார். அவருக்கு மண்டபம் முழுமையும் எழுந்து நின்று ஆதரவு தெரிவித்தது. வியன்னா மாநாடு ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்திற்கும், பாதுகாப்புச் சபைக்கும் தந்தி மூலம் அறிவித்ததோடு அவ்விடயம் கிடப்பில் போடப்பட்டது.

நிலைநாட்டப்பட்ட அரசுகளுக்குள் உள்ள தேசிய இனங்களின் போராட்டங்களே இம்மாநாட்டுக்கு வழிவகுத்தது என்ற உண்மையின் அடிப்படையில், இவ்விடயம் தொடர்பான பரிந்துரைகள் எவையென்று பார்த்தால், அவை திருப்தியீனத்தையே தருவதாக உள்ளது. இப்பரிந்துரை, சமாதானத்துக்கோ அல்லது போருக்கோ வழிவகுக்கும் என்ற சந்தேகத்தையும் தருகிறது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்து சர்வதேசச் சட்டப் பாதுகாப்பு மிகத் தெளிவாக வரையறுக்கப்படாத குறையே காணப்படுகிறது. முன்னைய சட்டக்கருவிகளை மீண்டும் வலியுறுத்தியதோடு மாத்திரமல்லாமல் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் தெரிகிறது. காலனித்துவ அல்லது வேற்று ஆதிக்கத்தின் கீழ், அல்லது பிறநாட்டு ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்கள், ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தின் சட்ட வரையறைக்குட்பட்டவாறு தகுந்த நடவடிக்கை எடுக்கலாமென்றும், சுயநிர்ணய உரிமை நிராகரிப்பானது, மனித உரிமை மீறலாக கருதப்படும் எனவும், மாநாட்டு இறுதி அறிக்கை தெரிவிக்கிறது. அதேவேளை, இந்நடவடிக்கையானது, ஒரு சுதந்திரமான நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, அரசியல் ஒற்றுமை ஆகியவற்றைப் பாதிப்பதாகவோ, துண்டாடுவதாகவோ இருக்கக் கூடாது எனவும் வலியுறுத்துகிறது. ஆயினும், மக்களிடையே சமத்துவத்தைப் பேணும், மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கும், எவ்வகையிலும் பாரபட்சம் காட்டாது, சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கங்களுக்கே இது பொருந்தும் எனக் கூறப்பட்டுள்ளது ஒரு சாதகமான விடயமாகும். இறுதி அறிக்கையில் வேறு ஒரு இடத்தில் சம உரிமைகள் குறித்தும், சுயநிர்ணய உரிமையைப் பற்றியும் குறிப்பிடும்போது, சமாதானம், ஜனநாயகம், நீதி, சமத்துவம், சட்ட ஆட்சி, பலமுகக் கொள்கை, அபிவிருத்தி, உயர்ந்த வாழ்க்கைத்தரம், ஒற்றுமை ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கங்களால் சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்கான நிபந்தனைகளாக இவை பயன்படலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டது. மக்களின் சுயநிர்ணய உரிமையை வரையறுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உலக சமூகம் தள்ளப்பட்டுள்ளது என்பதும், எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகத் தள்ளப்படும் என்பதுமே இம்மாநாட்டின் சீரான அம்சமாகும். ■■

## “யார் இவர்கள்” வீதி நாடகம்



கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது 'யார் இவர்கள்' என்ற தலைப்பிலான உளவாளிகள் தொடர்பான குறுகிய நேர தெருக்கூத்து காட்டப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மக்களுக்குள் மக்களாக மறைந்திருந்து தகவல்கள் கொடுப்பவர்களை இனம் கண்டு கொள்வதும், எமது போராட்டத்திற்கு உதவுவதும் மக்களுக்கு இலகுவாக இருக்கும்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அறியாதோர் ஆகினீர்

**ரவிக்குமார்!**

**மீ**ன்பாடும் தேன்நாடு என்று பேர்கொண்ட எமது மட்டக்களப்பின் இந்த வாவிக்கரையில் நின்று, இந்த மீன்களின் ரீங்காரத்தை எத்தனை நாள் ரசித்திருப்போம். இன்று, நீயில்லாமல் நான் தனியே நிற்கையில், மீன்கள் பாடும் அந்த மெல்லிய ஒலிகூட சோக இசையாகவே தோன்றுகிறதே!






போன திங்கட்கிழமை உன்னையும், உன் தம்பி அன்ரனியையும் இழந்த அந்தச் சம்பவத்தை நினைத்தால் ஏற்படும் ஏதோ இனம்புரியாத உணர்வு, ஆத்திரத்தில் எம்மை நிதானமிழக்கச் செய்துவிடுமோ என்றுகூட அஞ்சுகின்றேன்.

அன்று நான் தடுக்கத் தடுக்க "குளித்துவிட்டு உடனே வந்துவிடுகின்றேன்" என்று சொல்லிவிட்டு உனது தம்பியுடன் போனாய். 'தம்பியுடையான் சண்டைக்கஞ்சான்' என்கிற பழமொழிதான் அப்போது எனக்கு நினைவுக்கு வந்தது. அன்று, எனது தேக நிலை நன்றாக இருந்திருந்தால், எப்படியும் என்னால் முடிந்தவரை உன்னைக் காப்பாற்றியிருப்பேன்.

குளித்துவிட்டு இன்ன வீதியால் தான் வருவாய் என்பதை அந்த மாபாவி விபரமாக தகவல் அனுப்பியிருக்கின்றான். உள்வீதியாலும், பிரதான வீதியாலும் நீயும், உன் தம்பியும் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டீர்கள் என்பதைக் கேள்விப்பட்டதும், ஒவ்வொரு தாக்குதலிலும் மின்னிய உனது வீரமே என் நினைவுக்கு வந்தது. அதிரடிப் படையினருக்கு ஏதோ கஷ்டகாலம் என்றுகூட நினைத்துக் கொண்டேன்.

காயமடைந்த உன் தம்பியின் அருகில் நீ ஓடியதும் "அண்ணா நீ தப்பிவிடு" என்று சொல்லவும், அதைக் கேளாமல் நீ அவனைத் தூக்கிக் கொண்டு ஓடும்போது காயப்பட்டாய். சந்தியில் அதிரடிப்படையினர் உங்களை நெருங்கவே, "அண்ணா என்னைச் சுட்டுவிடு" எனக் கெஞ்சியபோது...... ஆண்டவனே! உன் உடன்பிறப்பு அன்ரனியின் தலையில் நீயே.....! ஓ எனக் கதறிய நீ சயனைட்டைக் கடித்துவிட்டு, ரவைகளை முடித்து, உனது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





**லெப். ரவிக்குமார்**
**(நாகேஸ் யோகராஜா)**
**உப்போடை, கல்லடி.**

**பிறப்பு:** 23-03-1964 **வீரச்சாவு:** 10--03-1986

பிஸ்ரலை ஆற்றுக்குள் வீசி எறிந்த சம்பவம் பற்றி, அச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள்



விபரித்தபோது, 'விடுதலையே.....! உனக்காக எத்தனை துயரங்களைத்தான் எம்மனதில் ஏற்றவேண்டியுள்ளது' என எண்ணிக்கொண்டேன்.

காப்பிலித் தோற்றம் கொண்ட முரட்டுக் குழந்தையான நீ அழுததை, கல்லடியில் எவருமே கண்டிருக்க மாட்டார்கள். பாடசாலையில் உனது தம்பிக்கு யாராவது அடித்துவிட்டால், அவர்களை அடித்து உருட்டி துவம்சம் செய்துவிடுவாயே! நீ அடித்து நொருக்கிய கதிரைகள் தான் எத்தனை!

அவ்வளவுக்கு பாசம் வைத்திருந்த உனது தம்பியை நீயே எம்னுலகம் அனுப்பியதையும், பகைவரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதில் நீயும், உன் தம்பியும் காட்டிய மன உறுதியை நினைக்கையிலும், தம்பியை இழந்த நிலையிலும், எமது இயக்க ஆயுதம் எதிரிகளிடம் சிக்கக் கூடாது என்பதற்காக அதை ஆற்றில் வீசி எறிந்த நிதானத்தை நினைக்கையிலும், தாங்க முடியாத வேதனைகளுக்கு மத்தியிலும் எம்மனதில் வைராக்கியம் மேலோங்குகிறதடா!

இவையெல்லாம் தலைவர் எமக்கு ஊட்டி வளர்த்த விடுதலை உணர்வின் வெளிப்பாடே..

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது தலைவரை ஒழித்துவிட்டதாக 'லங்கா புவத்' பெருமையடித்துக் கொண்டது. ஆனால், எத்தனை ரவிக்குமார்கள், எத்தனை அன்ரனிகள் மீண்டும், மீண்டும் இந்த மண்ணில் மலர்வார்கள் என்பதை அது சொல்லப்போவதில்லை. நாளைய வரலாறு இந்த உண்மைய நிச்சயம் உணர்த்தத்தான் போகின்றது. அதுவரையில் நான் உயிருடன் இருப்பேனோ என்னவோ?

வழக்கத்தில் படுவான்கரையிலிருந்து கல்லடிக்குத் தோணியில் வரும்போது எவ்வளவு திட்டங்களையெல்லாம் கதைத்துக் கொண்டு வருவோம். இன்று இந்த வாவியிலே தோணியை வலித்துக் கொள்ளும்போது, எனது இதயமும் சேர்ந்து வலிக்கிறதடா!

ஆற்றிலே நாம் கதைத்தவை ஆற்றோடு போகாமல் அவற்றை அபார சாதனைகளாக்கக் காத்திருக்கிறேன்.... கொஞ்சம் பொறு!

**இதனை எழுதிய மாவீரன் கப்டன் கரன், இதே இடத்தில், ஒரு சுற்றிவளைப்பில் அகப்பட்டு 10-11-1986 அன்று வீரச்சாவடைந்தார்.**

www.tamileelamarchive.com



தமிழீழத்தில், எரிபொருள் தடையை எதிர்த்து நடைபெற்ற வெகுசன ஒன்றியத்தின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்..

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com